# ஆறு ஏரியாகிறது!


# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

11-8-61 (வெள்ளி) விலை 16 காசு


## ∴ குன்று தூக்கப்படுகிறது!
## ∴ உலகம் காணு அதிசயம்!
## ∴ ஆச்சரியம்! ஆனுல் உண்மை!

கண்ணின் கடைப் பார்வை காதலியர் காட்டிவிட்டால், மண்ணில் மனிதருக்கு மாமலையும் ஓர் கடுகாம்!—எ[illegible]ர், கவிஞர்.

காதலியர் என்ன, அவர்தம் கடைக்கண்ணைவிட பெற்ற சுதந்திரம் பெரிது—அந்தச் சுதந்திரத்துக்காக, மலையையே பெயர்த்தெடுப்போம்—என்று மார் தட்டுகின்றனர் அந்நாட்டு மக்கள்.

* * *

மலையைப் பெயர்ப்பதா! என்னப்பா, இது? என்ன இது வேடிக்கை!—கதையளக்கிருயா! அனுமார் சஞ்சீவி மலையைப் பெயர்த்தார் என்பதுபோல, நீ ஒரு புதுக்கட்டுக்கதையா கட்டுகிருய்? எனக்கூடும் நீங்கள்.

ஆம்! அறிவு—ஒரு குன்றத்தை, அப்படியே பெயர்த்து எடுக்கப் போகிறது!!

எங்கே? எப்படி! ஏன்!—எனக் கேட்கக்கூடும் நீங்கள்.

* * *

ஆடை அணிகலனை போடுவதற்காகவே இரண்டு மூன்று மாளிகைகள் வேண்டும்—வாகிங் ஸ்டிக்' குகளை வைப்பதற்காகவே இரண்டு பெரிய அறைகள் வேண்டும்—மூக்குப் பொடிபோடும் டப்பிகள் முன்னூறு உண்டு—அவைகளில் வைரமிழைத்தும், ரத்தினம் பதிக்கப்பட்டதும், வைடூரிய மணி பொருத்தப்பட்டதுமாக வகை வகையாகப் பல உண்டு—குளிக்கும் அறை முழுதும் பளபளவென்று மின்னும் வெள்ளித் தகடு வேயப்பட்டிருக்கும் — மூக்குக் கண்ணுடிகள் மட்டும் மூவாயிரம் நாலாயிரம் இருக்கும்—காலணிகள் [illegible]தன என்று கணக்கெடுக்க முடியாது- அய்யாவின்கண்ணில் ஒரு அழகு மங்கை பட்டுவிட்டால், அவளுக்கும் அரண்மனை வாசம் நிச்சய கிடைக்கும் —போனமாசம் கடைக்கு உலா போன போது கண்டார் எழிலியை; கொண்டார் மையல்; பூண்டார் அவளை மனைவியாக—என்றெல்லாம் பேசப்பட்ட பரூக் எனும் எகிப்து அரசன், இன்று அவை அத்தனையையும் இழந்து — ஆசையோடு கட்டிக் கொண்டானே அந்தக் காதலியும் என்னுடைய உண்மைக் காதலன் ஊரிலிருக்கிருன்; உன்னை, உன் அதிகார மிரட்டலுக்காக கட்டிக்கொண்டேனே ஒழிய அன்பாலல்ல என்று சொல்லி ஒடிவிட!! பாரிசா, நேபிள்சா, என்று தினம் ஒரு விடுதி; நாளுக்கொரு ஓட்டலுமாக, அலைந்து கொண்டிருக்கும் செய்தியை நாடு அறியும்.

அப்படிப்பட்ட சுகபோகியை அகற்றிய சுதந்திரத்தை மக்களுக்குக் கொண்டுவந்துவிட்டோம்—அப்படிக் கொண்டு வந்தது நாங்கள்—அதை எப்படிப் பெற்ருேம் தெரியுமா, என்று எகிப்து நாசர், பல்லவிப் பாடிக் கொண்டில்லை, இன்று.

* * *

அடிமையா யிருந்த போதும் இப்போதும் எகிப்துக்கு வளம் தரும் 'பொன்னி, யாகயிருப்பது நைல் நதியாகும்!

நைல் நதிக்கரையிலே—என்று ஆரம்பித்தால், சரித அறிஞர்கள் மூச்சுவிடாமல் முப்பது ஆண்டுகள் பேச முடியும். பேரசி கிளியோபாத்திரா,மாவீரன் அந்தணியுடன் படகோட்டிக் களித்தப் பவனியைப் பற்றிப் பாடலாசிரியர்கள், வர்ணித்துக்கொண்டேயிருப்பர். அளவளவு சிறப்பும் புகழும் பெற்ற நைல்நதி—சில சமயங்களிலே நஞ்சாகவும் ஆவதுண்டு, எகிப்து மக்களுக்கு!!

எப்படி அண்மையில் இங்கே நமது காவிரி, நமக்கெல்லாம் பெரிய தலைவலியைத் தந்ததோ, அதே வேதனையை அங்கே நைல் அளிப்பதுண்டு. இங்காவது காவிரியில் வெள்ளம் வந்தால் கழனிகளும் ஊர்களும் 'காவா' கின்றன! அங்கே வெள்ளம் வந்தால், உடைத்துக் கொண்டு சூடான் பகுதியிலிருக்கும் பாலைவனங்களுக்குள் போய், அப்படியே ஒன்றுக்கும் உதவாமல் போய்விடுமாம்—நைல் நதியின் பலனைப்பெறவேண்டிய எகிப்து, நீரின்றி வாட நேருமாம்!!


இப்படி நீர் வீணுகமற் செய்ய வேண்டுமே என்கிற யோசனை பரூக்கின் காலத்தில் எழவில்லை. பணவெள்ளம் தன் மாளிகையில் குறையாமல்சுகபோகம் தன்னைப் பொறுத்தவரையில் மாருமலிருந்தால் போதும் என்கிற சுயநலம் தவிர, வேறென்ன தோன்றியிருக்கமுடியும் மணிமுடி கொண்டவனுக்கு!


மக்களின் வேதனை மக்களுடைய அரசுக்கு—அந்த அரசை நிர்மாணித்த விடுதலை வீரர்களுக்குத்தானே புரிய முடியும். கன்றின் புண், புலிக்குத் தெரியுமா? பசுவுக்குத்தானே புரிய முடியும்!!

அதனுல் விடுதலை பெற்ற எகிப்து, வீணுகும் தண்ணீரைத் தேக்கிப் பயன்படுத்துவதற்காக அணையைக் கட்டுவதென்று முடிவெடுத்தது. அசுவான் அணை எனும் பெயர் கொண்ட அந்தத் திட்டம் உலகிலுள்ள பெரிய திட்டங்களில் ஒன்றெனக் கருதப்படுகிறது!

அணைக்கட்டி விடலாம்—அங்கே தண்ணீர்வர வேண்டுமல்லவா—ஆறு மேடாக் வருவதால் கொஞ்சம் வெள்ளம் வந்


11-ம் பக்கம் பார்க்க




நாடகத்துக்குப் போயிருந்த துரைசிங்கமும் லீலாவும் இரவுக்குள் புதைந்தக் கொண்டிருந்த கல்கத்தாவின் வீதிகள் வழியே நடந்து வந்தனர். வழியில், தன்னுடைய அனுபவங்களையும், தான் கல்கத்தாவில் பணியாற்றியபோது ஏற்பட்ட நிகழ்ச்சிகளையும், சுவாரசியமாக எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்தார், துரைசிங்கம். லீலா, ஒவ்வொரு சம்பவத்தையும் துருவித் துருவிக் கேட்டாள். அவளுக்கு எப்போதும் துப்பறியும் கதைகள் என்றால் பிடிக்கும்!

அத்துறையில் பேர்போனஒருவருடைய வாயிலிருந்து, உண்மையில் நடந்த பல நிகழ்ச்சிகளைக் கேட்கக் கேட்க, பல நாவல்களைப் படிப்பது போலிருந்தது லீலாவுக்கு. வழியில் ஒரு ஓட்டலில் இரண்டு பேரும் சாப்பிட்டு விட்டதால், நேரே அவர் தங்கியிருந்த அறைக்குள் போய் உட்கார்ந்து இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். "நேரமாயிற்றும்மா! காலையில் எழுந்து

## -தொடர்கதை-

வேலைக்குப் போக வேண்டியவள், நீ போய்ப் படுத்துக்கொள்......", என்று எவ்வளவு சொல்லியும் லீலா கேட்கவில்லை. துப்பறியும் கலையை ஒரே இரவில் தெரிந்து கொள்ளும் ஆவல் கொண்டவளைப்போல இருந்தாள். அப்படி இருவரும் பேசிக் கொண்டிருந் சமயம், பேச்சுவாக்கில் சமீபத்தில் தனக்கேற்பட்ட அனுபவம் ஒன்றையும் லீலா சொன்னாள். இரயிலில் கமலநாதன் என்கிற ஒருவனைக் கண்டது — அவன் பணப்பை தன் மூட்டையில் கிடந்தது. டிக்கெட்டில்லாததால் அவனை இழுத்துக் கொண்டு போனது. அந்த ஊர் ஸ்டேஷன்மாஸ்டருக்குத் தான் பணப் பையை அனுப்பியது—அவர் பெற்றுக் கொண்டதோடு சிறையிலிருந்த கமலநாதனிடம் சேர்ப்பித்து விட்டதாக அறிவித்தது — முதலிய விபரங்களைச் சொல்லச் சொல்ல, துரைசிங்கம் முகத்தில் புதியதொரு ஒளி உண்டாயிற்று! தான் நினைத்ததுபோல், கமலா சாகவில்லை — இங்கேதான் கல்கத்தாவுக்குப் பயணம் வந்திருக்கிறான் — பணப்பை சேர்ந்ததும் இங்கு வந்து இங்கேதான் அலைந்து கொண்டிருப்பான் — எப்படியாவது ஜானகியைக் காப்பாற்றி அருமைநாயகத்துக்கும் அவர் மகளுக்கும் ஆனந்தம் உண்டாக்கமுடியும் — என்கிற நம்பிக்கை மலர்ந்தது. லீலாவிடம், அவனை எங்கேயாவது பார்த்தால், விடாமல் அறைக்குக் கொண்டு வந்து சேர்க்கும்படிச் சொன்னார். அந்தக் கமலநாதனிடம், அவருக்கேன் இவ்வளவு அக்கரை? — என்று லீலா எண்ணினாள்; ஆனால், கேட்கவில்லை! இன்னும் மணமாகாத தனக்கு...!! இப்படி எண்ணும் போதே, அவள் முகம் நாணத்தால் சிவந்தது. படித்தவள் — புத்திசாலி — அழகுமுள்ளவள் என்றாலும், ஆதித் திராவிடப் பெண்ணைத் தன்னை யார் துணிந்து கலப்பு மணம் செய்து கொண்டு வாழ முன்வருவார்கள் என்கிற அச்சத்தால், அவள் திருமணத்தைப்பற்றியே நினைப்ப

## அண்ணல்

தில்லை. எத்தனையோ வாலிபர்கள் வலுவில் அவள் போகும் டிராமில் தினசரி ஏறுவார்கள்—அவள் எப்போது ஆபீசைவிட்டு வருவாள், 'தரிசனம்' கொடுப்போம், என்று தவமிருப்போரும் உண்டு—அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்று அறிவாள் லீலா. அவர்களுடைய சேட்டைகளை நினைத்து உள்ளுக்குள் சிரித்து ஒதுக்கித் தள்ளிவிடுவாளே ஒழிய, ஒருபோதும் சட்டை செய்வதில்லை......இருவரும், அந்த அறையில், நேரம் போவதுபோல், உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

காலில் விழுந்து தண்டனிட்ட கள்ளனுடன், வீராதி வீரனைப் போல் வீதியில் வந்து கொண்டிருந்தான் கமலா! அறிமுகமில்லாத அவ்வளவு பெரிய பட்டினத்தில் அதுவும் அர்த்தராத்திரியில் நண்பர்கள் முகததில் கரிபூசத் தான் மேற்கொள்ளப் போகும் துணிச்சலான காரியத்தைப் பற்றித் தனக்குள்ளாகவே மகிழ்ந்து கொண்டாள். எதிர்பாராமலே தனக்கு எல்லாம் வருவதாக எண்ணிப் பூரித்தான். திருட வந்தவன், தன்னைக் 'குருவே!' என்று கூறுவதைக் கேட்டு, தன்னுடைய மேதா விலாசத்தின் அருமையை அவனே பாராட்டிக் கொண்டான். அந்தப் பூரிப்பில் செல்லும் அவன் பின்னே வந்த கள்ளனுடைய கவனம் எல்லாம், எந்த வீட்டுக் கதவு அகப்படும்—எதில் நம் சாமார்த்தியத்தை அவருக்குக்காட்டலாம் — எப்படி அவரிடமிருந்து அமெரிக்கா போன்ற இடங்களில் நூதனமாகத் திருடும் முறைகளை அறியலாம் என்பதிலேயே பதிந்து கிடந்தது. திடீரெனத் திருடன் 'குருவே! இது கொஞ்சமும்வசதியாக இல்லை...", என்று ஒரு வீட்டைக் குறிப்பிட்டுக் காட்டினான். எந்த வீடாயிருந்தாலென்ன! அதன் அறைக்குள் நுழைந்து தான் திருடியதற்கு அடையாளமாக ஏதாவது ஒன்றை எடுத்துக் கொண்டுவர வேண்டும்—மறுநாள் காலையில் கூட அப் பொருளை அந்த வீட்டாரிடம் திருப்பிக் கொண்டு போய்க் கொடுத்துவிடலாம் — பந்தயத்தில் வெல்ல வேண்டும்; இதுதானே கமலாவின் ஆசை. இப்படியுமா ஒரு பைத்தியக்காரனிருப்பான் என்று நீங்கள் நினைப்பதை அறிவேன்! வீம்புக்காகக் காசையும் பெயரையும் விரயமாக்கிக் கொண்டு வீணான பல, கதாநாயகர்களை நான் அறிவேன்!! ஒரு நண்பர், எனக்கு அவரும் நானும் சினிமா ஸ்டுடியோ ஒன்றுக்கு, அப்போது எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த படம் ஒன்றின் "ரஷ்" பார்க்கப் போயிருந்தோம். அந்தப் படத்தின் காட்சிகளில் ஒன்றில் ஒருபெண், குளித்துக் கொண்டிருந்தாள். அவளை எப்படியும் அடைகிறேன், பார்! — என்று சவால் விட்டு விட்டு, அதற்காக என்னென்னவோ செய்து, கடைசியில் அவள் விட்டால் போதும் — விடமாட்டேனென்கிறாள், என்று இப்போதுகூடத் திணறித் திண்டாடிக் கொண்டிருக்கிறார், அந்த நண்பர்! வாலிப வயதில், இப்படியெல்லாம் மூளையையும் நேரத்தையும் வீணாக்கி விட்டு, அதன் காரணமாம் ஆறாத ஆபத்தில் மாட்டிக் கொள்வோருண்டு. கமலாவும் அப்படித்தான்! அவன் மூளையே, அலாதியானது!! அதனால், திருடன் காட்டிய வீட்டுக்கு எதிரே நின்றனர், இருவரும்.

"குருவே! நான் எப்படித் திருடுவது வழக்கம் தெரியுங்களா? அதோ தெரியவில்லை, பால்கனி! முதலில், அங்கு ஏறுவேன்...",

"ஊகூம்.......சரி!.........ஏறிக் காட்டு."

"நீங்க வரவில்லையா?"

"ஓ! நான் வராமலா...நீ ஏறு. பிறகு கைகொடு, நானும் ஏறுகிறேன்..."


திருடன், இப்படி அப்படிப் பார்த்தான். பால்கனிக்குக் கீழே ஒரு ஜன்னல் இருந்தது. அதில் ஒரு கால் வைத்தான் — ஒரு உந்து உந்தினான் மேலே போய்விட்டான். அவனைப்போல் போகமுடியுமா, கமலாவால்! பால்கனிக்குப் போவதற்குள் திண்டாடித் தவித்து, கால் உராய்ந்து, கை தேய்ந்து, தட்டுத் தடுமாறி சேர்ந்தான்!! திருடனுக்கு, என்ன இதையேறக் குருநாதர் இவ்வளவு திண்டாடுகிறாரே என்று சந்தேகமாயிருந்தாலும், கற்றுக் கொள்ள வேண்டிய 'விஷயங்களை' எண்ணி, ஒன்றும் பேசவில்லை. பிறகு, தன் கையிலிருந்த கத்தியால் நைசாக இப்படியும் அப்படியும் தட்டிக் கதவுகளை திறக்கும்படிச் செய்தான், திருடன். தான் செய்தது சரியா என்று கேட்பது போல, குருவைப் பார்த்தான். குருவும், தலையசைத்து, ஆமோதித்தார். பிறகு இருவருமாக அறைக்குள் மெதுவாக நுழைந்தனர். அவர்கள் நுழையவும் "டேய்! என் வீட்டுக்குள்ளா திருட... வர்ரீங்க — வாங்கடா, பார்க்கலாம்!!", என்று ஒரு குரல் கேட்டது, அதைத் தொடர்ந்து விளக்கும் எரிந்தது. கத்தியைத் தயாராக வைத்துக் கொண்டான், திருடன்! கமலாவின் கால்களோ, அவனையறியாமல் ஆடலாயின!! ஏனெனில், விளக்கு ஸ்விட்சு அருகில் நின்றவனும் ஆள் வாட்ட சாட்டமாய்க் நின்றான். ஆனால் என்ன ஆச்சரியம்! அவன் இவர்களைக் கண்டதும், "டேய், நீயா! என்னடா பாபு!! நீயா, இங்கே வந்தே...", என்று, திருடனைப் பார்த்து விசாரித்தான். திருடனுக்கும் வியப்பு. போயும் போயும் இவன் வீட்டுக்கு வந்து விட்டோமே என்று. "ஆமாம், ஆபிரகாம்! அய்யா இருக்காரே இவரு, நம்ப குரு...சில புது வித்தைகளைச் சொல்லித் தர்ரேன்னாரு.....எந்த 'மாடலில்' நான் திருடறேங்கிறதைப் பார்த்து 'கரெக்ட்' பண்றதாகச் சொன்னாரு...ஆமா நீ எப்ப வீடு மாத்தினே?"

கொஞ்ச நாளாச்சு! வேறெங்கேயும் போகாமெ உன் வித்தையைக் காட்ட என் வீட்டுக்கு வந்து சேர்ந்தியே......உனக்கு இங்கே என்ன கிடைக்கப் போவுது...உட்காரு! எப்படியிருக்கான், அந்த மூலைக் கடைக்காரன்..."

"அட அவன் ஒரு சுடுமூஞ்சிப்பா! என்ன ஒரு நாளைக்கு கையிலே காசில்லேன்னு கடன் கேட்டா, ஒரு பாட்டில் இரண்டு பாட்டில் கொடுத்தா என்ன...... ஆபிரகாம் பிரதர்! எனக்கு வேண்டியவங்களை யெல்ல ம் அங்கே போகக் கூடாதுன்னு தடுத்துக்கிட்டு வர்ரேன்...தயவு செஞ்சு இனிமே, நீயும் அங்கே போகக்கூடாது!"

திருடன் பாபுவும் ஆபிரகாமும் அந்திநேரத்து நண்பர்கள்! குடிக்கும் கடையில் சிநேகிதர்களானவர்கள்! இப்படிப் பல 'தோஸ்து'கள் உண்டு, ஆபிரகாமுக்கு. இரண்டு பேரும் குசலம் விசாரித்துக் கொண்டு, பீடி கொடுத்துக் கொண்டு, பேசிக் கொண்டிருந்தபோது, அறையை

7- ம் பக்கம் பார்க்க




பிரசவ வேதனை!

கரு வயிற்றில் உருவாகையில், தாய்க்கும் தந்தைக்கும் தாங்க முடியாத களிப்பு. கருஉருவாகி வெளியே வரும்போது தாய்க்கு மட்டும் தாங்க முடியாத வேதனையின் அனுபவம். இது ஒருவகை அநீதியல்லவா?

போகட்டும். அந்தக் களிப்பு, மனித ராசியின் நிலைத்த தன்மைக்கே இயல்பான ஆவேசத்தின் நிறைவு, என்று கொள்வோம்! மனித ராசியின் கருவூலத்தில் இந்த முறையில்தான் முதல் சேர வேண்டும். பிரசவத்தின் போது, எதற்குத்தான் இந்த வேதனை அனுபவமோ? கரு புனிதமானதாக இருக்கலாம். அதில் காலும் கையுமான உறுப்புகள் உருவாகும்போது, களங்கம் ஏற்பட்டு விடுகிறதோ என்னவோ?

பிரசவ வேதனை. இது எங்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. மாளிகையிலும், மண்குடிசையிலும், தெருவோரத்திலும் வேதனை என்பது ஒரே ரகத்தில் அமைந்ததுதான். ஆறுதலின் நிலைமட்டும் வெவ்வேறு விதமாக அமையும். எந்தவிதமான ஆறுதல் மொழிகளுமின்றி அனாதை நிலையில் ஏற்படும் பிரசவவேதனை எப்படிப்பட்டதாக இருக்கும்?

*　　*　　*

பெருமழை பெய்துக் கொண்டிருந்த ஒரு கரிய இரவில், பாழடைந்த தெருத் திண்ணை ஒன்றில் தாங்க முடியாத அந்த வேதனையை, மெல்லிய முனகல் ஒலிகளால் கட்டுப்படுத்திக்கொண்டு, அனாதைத்தாயொருத்திசுமையை அகற்றிக்கொள்ள பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்தாள். கண நேரத்தில் பிரசவமும் நிகழ்ந்து விட்டது. புது ரத்தத்தின் மணத்தை அறிந்தஇரண்டு நாய்கள் எங்கிருந்தோ அங்கு வந்து சேர்ந்துக் கொண்டன. இருட்டானாலும்தாயுள்ளம்அந்தஎதிரிகளை அறிகிறது. அசைய முடியாத நிலையில், மெல்ல கீழேயிருந்து கற்களை தேடி எடுத்து, நாய்களை விரட்ட முயன்ருள்.

அந்தப் புதிய பிறவிஎப்படியோ உலகில் வந்துவிட்டது. அந்த வருகை பெரும் புரட்சிகரமாக இருந்தது. அது இந்த மண்ணுலகில் வந்ததற்கு சாட்சிகள் யாருமில்லை. எவரது உதவியும் அதற்குத்தேவையிருக்கவில்லை. தனக்குத் தானாகவே காலால் உதைத்து, உழைத்து வெளியே வந்தது. அந்த போராட்டத்தின் வலிமையை அழுகையாக்கி உலகிற்கு அறிவிக்கிறது.

பெற்றவள் ஒரு கணத்தில் வேதனையை மறந்தாள். இருளில் அவள் குழந்தையை தொட்டுத் தழுவிப் பார்த்தாள். ஆண் குழந்தை!

பனியாக குளிர்ந்த மழைநீரில் குழந்தை நடு நடுங்கி அழுகிறது நாய்கள் நாக்கை தொங்கவிட்டுக் கொண்டு அருகில் வந்து நின்றன. குறிப்பறிந்த அவள் குழந்தையை எடுத்து மார்போடணைத்துக் கொண்டாள். ஏதோ வழ வழப்பான பொருள் குழந்தையின்தொப்பிளோ? நாய்கள் தரையிலிருந்து எதையோ நக்கி தின்கின்றன. அவள் மெல்ல எழுந்தாள்.

மழை இரைச்சலுடன் இன்னும் பெய்கிறது. கூரையிலிருந்து வழியும் நீரை ஏந்தி குழந்தையை குளிப்பாட்டினுல் என்ன என்ற யோசனை தோன்றியது. குளிரில் நாக்கு படபடக்க குழந்தை அழுகிறது. இனியும் குளிர்ந்தநீரை மேலே ஊற்றினுல்?... திண்ணையின் ஓரத்தில் சாக்குத் துண்டொன்று கிடந்தது அவள் நினைவிற்கு வந்தது. அதை எடுத்து குழந்தையின் உடம்பை துடைத்தால் என்ன? ஐயோ கூடாது. குழந்தைக்கு வலிக்கும்! பசு, பிறந்த கன்றை நாவால் நக்கிச் சுத்தப்படுத்துவதை அவள்பார்த்திருக்கிருள். ஆனுல் மனிதர்கள் அப்படியில்லையே. வேறு வழியில்லாததினுல் பசு அப்படிச் செய்கிறது. சுவையோடு நக்கி நக்கி சுத்தப்படுத்துகிறது. வேறு வழியில்லாத மனிதத் தாயின் குழந்தையும் சுத்தமாக வேண்டும். நாக்கினுல் நக்கினுல் என்ன? நான்பெற்ற குழந்தைதானே? அந்த எண்ணம் எண்ணமாகவே நின்றுவிட்டது. அணிந்திருந்த பழைய துணியால் அவள் குழந்தையை துடைத்தாள்.

**கேரளக் கதை**

குழந்தையின் சின்னஞ்சிறுமுகத்தோடு அவள் முகம் சேர்ந்தது.


"என் 'செல்வமே!" அவள் மனம் நிறைந்தது. அத்தனை பெரிய மழையும் காற்றுமாக குமைந்தும் ஒரு மின்னல்கூடஇல்

# நமது பாசறை

## காஞ்சி கல்யாணசுந்தரம்

இப்பொழுது நாம்பெற்ற வளர்ச்சி! வாழ்வு!
　எவ்வாறு நாம்பெற்ருேம் இந்த வாழ்வை?
அப்பொழுதோ அடிதடிகள்! குத்து வெட்டு!
　அநியாயக் காரர்களின ஆட்ட பாட்டம்!
தப்பென்பார் நம்கொள்கை! கொள்கை சொன்னேர்
　தப்புதற்கும் வழியில்லா இருண்ட நேரம்!
அப்பொழுதே மேடைகளில் நமது கொள்கை
　அழைப்புதனை உச்சரித்த அஞ்சா நெஞ்சன்!

எவருக்கும் அஞ்சா நெஞ்சம்!
　எதிர்ப்பேச்சு மனிதர்! நாடு
கவனிக்கும் தலையங் கத்தில்
　கருத்துரை கொடுக்கும் வீரர்!
அவதிகள் குடும்பத் தொல்லை
　அனைத்தையும் மறந்து நாட்டின்
கவலைதன் கவலை என்று
　கழகததை நினைவில் வைத்தோர்!



மூத்தவர்! பலரை நம்போல்
பார்த்தவர்! புகழை எங்கும்
சேர்த்தவர்! எதிர்வா தத்தைத்
தீர்த்தவர்! தீரர்! வீரர்!

வாழ்ந்திருந்த அழகிரியை வாழ்வோர்க்கு நினைவூட்டி
வாழ்கின்ற அழகிரியார்! வாய்க்கின்ற வாய்ப்புதொறும்
நாட்டுப் புறநடையில் நம்கழகக் கொள்கைகளைக்
காட்டிவரும் பேச்சாளர்! காஞ்சிநகர்த் தோன்றல்இவர்!

அறிவக அண்ணன்—யார்க்கும்
அறிமுக அண்ணன்!
　யார் இவர்?
காஞ்சி—கல்யாணசுந்தரம்.

கவிஞர் 'பொன்னிவளவன்

லாமற் போயிற்று. பிறந்த குழந்தையை ஒருமுறைகூட பார்க்க முடியவில்லை. இருள் விரிந்து கிடந்தது.

நாய்கள் உற்றுப் பார்த்து முணு முணுத்தவாறு எதிரிலேயே அமர்ந்திருந்தன. அவைகள் பாய்ந்துபிடுங்கிவிட்டால்? அவள் குழந்தையை சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

அவள் கனவு கண்டாள். குழந்தை வளருகிறான். அவள் பாடெல்லாம் பட்டு வளர்க்கிறாள். பிச்சைக்காரிப்பெண்ணே—நீ எப்படி அவனை வளர்க்கப் போகிறாய்?' என்ற ஒரு கேள்வி இடையே எழவேயில்லை.

இரவு விடியாத இரவாக தோன்றியது. குளிரில் நடுங்கும் குழந்தையையு அணைத்துக்கொண்டு அவள் அமர்ந்திருந்தாள். அந்த நாய்களின் பளபளத்த கண்கள் குழந்தையையே குறியாகக் கொண்டிருந்தன. பயம் அவள்இதயத்தைக் குடைந்தது. பெருமழையையும், சீறும் காற்றையும்பயன் படுத்திக் கொண்டு, அவள் குழந்தையைப் பறித்துக்கொள்ள ஏதோ பேய்க் கணங்கள் நாய் உருக்கொண்டு அவள் முன் இருப்பதாக தோன்றியது! அவளுக்கு பயமாகப் இருந்தது. எனினும் குழந்தையின் அணைப்பு தளரவில்லை, எவ்வளவுகொடுமை! அவளுக்கென்று சொந்தமாக எதுவுமே இருக்கக்கூடாதா? அவள் சுமந்து வேதனையோடு பெற்ற குழந்தை அது. அதை வைத்துக் கொள்வதுகூட பொறுக்க முடியாததா என்ன?

* * *

கடைசியில், காற்று அடங்கிற்று. மழை ஓய்ந்தது. நாய்களின் இழைப்பு மட்டும் இருளின் மூச்சாக ஒலிக்கிறது. எங்கோ தொலைவிலிருந்து அமைதியை பிளந்துகொண்டு கோழி ஒன்று கூவிற்று!

விடிந்து விட்டது!

மனிதன் சிரித்து, கலகலத்து, பரிதாபப்பட்டு உதவி செய்யும் விடிவு காலம்! நாய்கள் போய் விட்டன. கோழி பின்னும் கூவிற்று. மேகம் வடிந்தகிழக்கு வானில் விடிவின் மங்கல் ஒளி படர்ந்தது. குளிர்ந்த காற்றுவீசியது. ஒரு புதிய உலகம் அவள் முன் மலர்ந்தது. கண்களைமெதுவாகமூடி, கைவிரல்களைச்சுருட்டிக் கொண்டு, அவள் மார்புச்சூட்டில்—நிம்மதியாக உறங்கும் குழந்தையின் சின்ன முகத்தை, காலையின் புதிய ஒளியில் அவள் கண்டாள்.

அந்த தாயின் முகம் மலர்ந்தது. அவள் ஒரு தாய். அவளுக்கு ஒரு குழந்தை. அவள் மனம் புதிய பூரிப்பில் நிறைந்தது. குழந்தையை உற்றுப் பார்த்தாள். ஏனோ அவள் முகம் நாணத்தால் சுருங்கியது.

'ஆம். அதே முகம்!'

அவள் உதடுகள் முணுமுணுத்தன.

* * *

குழந்தையையும் எடுத்துக் கொண்டு அவள் தெருவில் நடந்தாள்.

எங்கே போவது? முன்போல் கால்போன போக்கெல்லாம் போய்விட முடியாது. இன்று அவளுக்குக்கடமையிருந்தது. பெரிய பொறுப்பு இருந்தது. எனினும் அவள் நடந்தாள்.

கொளுத்தும் வெயில். அவள் குழந்தையை மார்போடு அணைத்து வைத்துக் கொண்டிருக்கிறாள். இளமார்பில் பசி தணித்துக் கொள்வதற்கான பழக்கம் இன்னும் அதற்கு ஏற்படவில்லை. ஆனாலும் அவள் குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டுதான் இருந்தாள், குழந்தையின் பிஞ்சு உடலில் வெயில் படக்கூடாது. முதல் பிரச்னை அவளை அலட்டியது. மறுகணம் ஒரு நிழலில் அவள் ஒதுங்கிக் கொண்டாள். உருகியெழும் வெயில். சிற்றலைகளாக நடுங்கும் வெயில். குழந்தையோடு எப்படி இறங்கிப்போவது? அந்த பெருநிதி வாடிப்போய் விடுமல்லவா?

குழந்தை தூங்குகிறது. விழித்துக் கொள்கிறது. மார்பை சுவைத்தவாறே மயங்குகிறது. அதற்கு எவ்வித குறையுமில்லை. ஆனால், அவள் வயிற்றில் எரியும் பசியின் சூட்டில் மார்பு உலர்ந்து போனால்...அவளால் அதைஎண்ணிப்பார்க்கவேமுடியவில்லை. எப்படியும் என் செல்வத்தை வளர்த்துவிடுவேன்என்ற தன்னுணர்வு மட்டும் பெரிதாக நின்றது!

வெயில் குறைந்த போது, அவள் மரநிழலிலிருந்து குழந்தையுடன் புறப்பட்டாள். அன்றைய இரவை எப்படிக்கழிப்பது? இருள் வந்துவிட்டால் பிணந்தின்னி நாய்களின் தொல்லையும் துவங்கி விடுகிறது. இருளில் அவைகளிடமிருந்து குழந்தையைப்பாதுகாக்கவேண்டுமே? இனி முன்போல் கண்டஇடங்களிலெல்லாம் படுத்துத் தூங்குவதென்பது முடியாத காரியம். அவள் பாதுகாப்பதற்காக ஒரு பெருநிதியிருக்கிறது.

அவள் நகரமெங்கும் அலைந்தாள்; நேரம் ஆக ஆக அவள் கால்களின் வேகம் அதிகமாயிற்று. எங்கும் இடம் கிடைப்பதாக இல்லை. தெருவிளக்குகள் அணைந்தன. கடைகள் சாத்தப்படுகின்றன. நகரம் மெல்ல மெல்ல இருளில் அமிழ்கிறது. வீடுகளின் ஒளி தழுவிய பத்திரமான அறைகளில், ஜன்னல் வழியாக அவள் பார்த்தாள். அவைகளில் எங்கேனும்கொஞ்சம்இடம் கிடைத்துவிட்டால்...

அவள் அலைந்தாள், ஒரே தெருவில் பலமுறை அலைந்த அவளை, ஆட்கள் கவனித்தனர். ஆனால் அந்த அலைச்சலின் பொருளை யாருமே அறியவில்லை. யாரும் அறியவேண்டிய் தேவையுமில்லை. அவள், அலட்சியப் பொருள்தான். அவள் குழந்தையைப்பற்றி யாருக்குமே கவலையுமில்லை... இந்த உலகிற்கு எத்தனையோ வேலைகள்...

சாக்கடையில் அளைந்து வாழ வேண்டிய ஒரு குழந்தை. அது ஏன் அவள் வயிற்றில் வந்து பிறந்ததோ? சலசலத்துப்பாயும் சாக்கடையின் இழுப்பில், அமிழ்ந்து புரண்டு செத்து மடிவதற்காக, அந்தகுழந்தைதாயின் அணைப்பில் வளரப்போகிறது. விந்தையான ஒரு மாறுதல்!

அவளது நடையின் வேகம் குறைவதாக இல்லை. எங்கோ ஏதோ அடைக்கலமிருப்பதாக மனதில் நம்பிக்கை...ஆனாலும் இடை இடையே ஒரு தடுமாற்றம் பார்வை இருளடைகிறது. அவளையே அறியாமல் நின்று விடுகிறாள்.

அவள் அவளது கடமையை நிறைவேற்றியே தீருவாள்.

கடமை. யாருக்குயாரிடமுள்ள கடமை? இந்தக் கேள்வியை, அவளை பெற்ற தாய்க் கிழவியிடம் கேட்க வேண்டும். அவளாலும் பதில் சொல்ல முடியாது. ஏனெனில் கடமை என்ற அந்த சொல், உருவமற்றது. ஆனால் வலிமை மிக்கது. அது வளரத்தான் செய்யுமே தவிர, அழிய முடியாதது.

எப்படியேப ஒரு வீட்டில் வேலை கிடைத்தது. ஆனால் அங்கேயும் அதிக நாள் கடத்த முடியவில்லை. வேலை செய்வதைவிட குழந்தையை கவனிக்கத்தான் அவளுக்கு நேரமிருந்தது. எந்த வேலையும் செய்ய முடியவில்லை. குழந்தையின் அழுகை வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு அவலக்குரலாகத்தொல்லை தந்தது. இரவெல்லாம் அழுகைதான். கையிலேயே வளர்ந்து பழகிய குழந்தை. ஒரு நேரமாவது கீழே படுத்துக் கொள்ளவில்லை.

* * *

அவள் பின்னும் தெருவிற்கே வந்து சேர்ந்தாள். குழந்தையால் அவளுக்கு எத்தனைத் தொல்லை! அவள் வீடு வீடாக கையேந்தி திரிந்தாள். கையில் குழந்தையை காணும்போது, எல்லோர் முகத்திலும் காணும்வெறுப்பை அவள் கவனித்தாள்.

"நீ எதற்காக குழந்தை பெற்றாய்?" காண்பவரெல்லாம் இந்த கேள்வியை விட்டெறிவதாக அவளுக்குத் தோன்றியது! அந்த கேள்வியின் கடுமை அவளை வேதனை கொள்ளச் செய்தது. "நான் ஒரு பெண். அதனால் குழந்தை பெற்றேன்!" என்ற நல்ல பதில் அவளுக்குத் தெரியும். ஆனால் எப்படி வெளியே சொல்வது? கொஞ்ச நஞ்ச அனுதாபமும் இல்லாமலாகி விடும்!

குழந்தை பசியால் அழுதது. அழுதது. அவளது நெஞ்சு வறண்டு போயிற்று. மார்பில் முகத்தை புதைத்துப் ஏமாற்ற ஏக்கத்தால் குழந்தை வீறிட்டு அழுதது. குழந்தை பெற்ற தாய்மார்களிடமெல்லாம் பிச்சைகேட்டாள். அப்போது மற்றொரு கேள்வி புதிதாக பிறந்தது. "குழந்தைக்கு தகப்பன் இல்லையா?" எதற்குமே அவள் பதில் சொல்லவில்லை. அவளுக்கு ஒரே குறிக்கோள், குழந்தை வளர வேண்டும்!

சில வேளைகளில், குழந்தை அவள் மடியில் படுத்தவாறு, கைகால் அசைத்து விளையாடும். லேசாக சிரிக்கவும் செய்யும். இதைக்காணும்போது அவளது இதயத்தில் எங்கோ ஒருஇடத்தில் ஏதோ புதிய கிளு கிளுப்பு பறக்கும். பழைய நினைவுகளில் அவள் தன்னையும் மறந்து லயித்துப் போவாள்.

அவையெல்லாம் கதையா? அல்லது, சில்லறை நாணயங்களுக்காக மனதைபறிகொடுத்து விட்ட மயக்கத்தின் கனவா? அப்படியென்றால் இனிய நினைவுகளுக்கு இடமில்லை. எப்படியோ நடந்துவிட்டது. அந்த நிகழ்ச்சி மறக்க முடியாத வகையில் குழந்தையின் சிரிப்பில் அவள் அவனைக் கண்டாள், அவளுக்கு எதுவெல்லாமோ பேசவேண்டும் போலிருந்தது. அவ்வளவுதான்!

நீண்ட நாட்களாக பட்டினி.

குழந்தையின் உருவமே மாறிப் போயிற்று. கைகால்கள் சோம்பி விட்டன. வயிறு துருத்திக் கொண்டு நின்றது. கண்களில்

8-ம் பக்கம் பார்க்க

விற்பனையாகிறது! வாங்கிவிட்டீர்களா?

ஆகஸ்ட் இதழ்

'தமிழ்'

சிறப்பாசிரியர்
குன்றக்குடிஅடிகளார்

பாரதி தாசன், சாண்டில்யன், கோவி. மணிசேகரன்; குயிலன், சரஸ்வதி ராம்னாத் ஆகியோர் தரும் எழுத்தோவியங்கள் இடம் பெறுகின்றன. விலை 50 காசுகள்.

விற்பனையாளர் இல்லாத ஊர்களுக்கு விற்பனையாளர் தேவை.
விவரங்கட்கு: "தமிழ்" 14-உஸ்மான்ரோடு, சென்னை—17.

# நான் கண்ட அண்ணா

## அரங்கண்ணல்

- 2 -

"அடுத்த இரயிலிலாவது போகலாம் என்று காத்திருப்பேனே யொழிய, கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டுபோய் 'டிக்கட்' வாங்குகிற சுபாவம் எனக்கில்லை," என்று அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. முண்டியடித்துக் கொண்டுபோக விரும்பாததற்குப் பயமல்ல, காரணம்! அப்படிச் செல்லும்போது இன்னொருவருக்கு நாம் இடைஞ்சல் உண்டாக்க நேருமே, ஏன் அது, என்பதுதான்!!

அவ்வளவு மிருதுவான சுபாவம், அண்ணாவுடையதாகும். அதனால்தான் அரசியலிலும் மிருதுத் தன்மை மிக மிக ஏற்படவேண்டுமென்பதை அவ்வளவு தூரம் விரும்புகிறார். கன்னா பின்னாவென்று பேசுவது, எளிதில் எல்லோரிடத்திலும் பகையை உண்டுபண்ணிக் கொள்வது, தன் கொள்கைக்கு மாறான கொள்கையுடையவன் என்பதால் தரக் குறைவாகப் பேசுவது, முதலியவைகள் அவருக்குப் பிடிக்காது. ஏன் ஒருவன் பொது வாழ்க்கையில் ஈடுபடுகிறான்? தான் சரியென நம்பிய கொள்கையைஎல்லா மக்களும் ஏற்றுக் கொண்டு, அந்தக் கொள்கை வெற்றிபெற வேண்டும் என்கிற ஆர்வத்தால் அப்படிப்பட்டவன் மற்றவர்களை மதித்தால்தானே மற்றவர்களும் அவனை மதித்து, அவன் சொல்வது தவறா, சரியா என்று யோசிப்பார்கள். அதை விட்டு எல்லோரையும் எதிரிகள் என்று எண்ணிக்கொள்ளும் ஒருவனால் எப்படித் தன்வழியில் மாற்றாரை மடக்க இயலும்?—

இப்படிப்பட்டக்கருத்துடையவர், அண்ணா! இதனால்தான் திராவிட கழகமாயிருந்த காலத்திலேயே, அவர் ஏச்சுக்கும் பேச்சும் சந்தேகத்துக்கும் ஆளானார். 'வ. ரா.' அவர்களைப்பற்றி,'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என்று எழுதியபோது பலர் பல மாதிரியாகக் கருதினர். கவியரசர் பாரதியாரைப்பற்றி அவர் பாராட்டியபோது,'பாதை மாறி விட்டான்' என்று பேசியோர்கூட உண்டு.

காந்தியடிகள் சிலையை வேலூரில் திறந்து வைத்தபோது கூடப் பலர்பலவிதமாகஎண்ணினார்கள். அண்ணா அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் தங்கள் தங்களுடைய கோப தாபங்களைக் காட்டிக் கொள்ளப் பொதுவாழ்க்கையைப் பயன்படுத்துவது கொஞ்சமும் பிடிக்காது.

"கொள்கையும் கொள்கையும் மோதிக் கொள்ள வேண்டுமேஒழிய தனிப்பட்டோர் தாக்கிக்கொள்ள அல்ல,பொது வாழ்க்கை", என்று அவர் அடிக்கடி கூறுவார். காந்தியடிகளின் கொள்கைகளை எவ்வளவோ கிண்டலும் கேலியும் செய்தவர்தான் அண்ணா. ஆனால் அதற்காக அவருக்குள்ள பிறமரியாதைகளைமறுத்ததில்லை. ஆதித் திராவிடப் பெருங்குடி மக்களை "ஹரிஜன்"களாக்கி, காந்தியடிகள் செய்த முறை போன்றவை, அண்ணாவின் பேனாவால் கண்டிக்கப்பட்டன. அதே சமயம் அவருடைய அகிம்சா நோக்கமும் அறவழிகளும், அவரைப் பெரிதும் கவர்ந்தன. இன்றும் நேரு பண்டிதர் அவர்களிலிருந்து உள்ளூர் காங்கிரஸ் தலைவர்வரை யாரைப் பற்றிப் பேசுவதானாலும் அவர்களுக்குரிய மரியாதையை என்றும் தரமறுக்கார் அவர்.

"இந்தியாவிலுள்ள ஜனநாயகவாதிகளில் தலைசிறந்தவர் நேரு என்று மதிக்கிறேன். உண்மையான ஜனநாயகத்தை உருவாக்க அவர் படும்பாட்டினையும் நான் அறிவேன். அவருக்குப் பிறகு!—அவர் நீண்ட நாள்வாழட்டும்!!— அவரைப்போல நடுநிலையிலிருந்து எதையும் சீர் தூக்கிப் பார்க்கும் ஆற்றல்கொண்டவர்கள், வடக்கில் யாருமில்லை," என்று அவர் அடிக்கடி குறிப்பிடுவார்.

பண்டித நேருவும் அவருடைய குடும்பமும் இந்தியவிடுதலைக்காக ஈடுபட்டுப் பணிபுரிந்த தன் வகையையும் அந்தத் தியாகஉணர்வையும் வெகுவாகச் சொல்லி மகிழ்வார். காந்தியடிகள் காலமானபோது அண்ணா உண்மையில் பதறித் துடித்தார் என்பதோடு, நாலைந்து தினங்கள் நல்ல நிலைமையில் இல்லை என்பதை அவரோடு பழகியவர்கள் அறிவார்கள்! அதேபோல காமராசர் ஆனாலும்ஓமந்தூரார் ஆனாலும் குமாரசாமி ராஜா ஆனாலும் அவரவர்களுடைய பொதுவாழ்க்கைப் பணியின் அளவையும் திறமையையும் பாராட்ட ஒருநாளும் தவறியதில்லை. அவர்கள் கொண்டுள்ள கொள்கைகளிலுள்ள ஓட்டைகளையும், அதனால் அவர்கள் நாட்டுக்கு இழைக்கும் நன்மையில்லாதவைகளையும் எடுத்துரைப்பாரேயன்றி, "என்ன தெரியும் அவர்களுக்கு?" என்று அலட்சியப்படுத்தும் குணம் அவருடையதல்ல. கடந்த பொதுத் தேர்தலின்போது காஞ்சிபுரத்தில் அண்ணாவை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டவர் டாக்டர் சீனிவாசன் என்பவராகும். இவர் ஒரு அய்யர். மிகவும் நல்லவர். ஆனால் அவருக்குஎன்று தேர்தல் பிரச்சாரம் செய்ய வந்தவர்கள், அப்பப்பா, சொல்லவே கூசுகிறது, என்னென்னஇழிசொற்களுண்டோஅத்தனையையும் எடுத்தெறிந்து அண்ணாவைத் திட்டினர்! அதிலும் திராவிட கழகத்திலிருந்த (இப்போதும் இருக்கக் கூடும்!) நண்பர்கள் ஒரு கூட்டத்தை அண்ணா வீட்டுக்கு கொஞ்ச தூரம் தள்ளிப்போட்டுக்கொண்டு பேசினர்.

"டேய்! அண்ணாதுரை... உனக்கு பச்சை மூங்கில் வெட்டி தென்னம் ஓலைப் பாய் போட்டு, பூம் பூம் என்று சங்கு ஊதி பாடை கட்டித் தூக்கப் போறோம்..." என்று ஒருவர் ஒப்பாரியே வைத்தார்! அப்படிப் பேசியவர், நாம் திராவிட முன்னேற்றக் கழகமாகப் பிரிந்து வளர்ந்து கொண்டிருந்த நேரத்தில் திராவிடர் கழகத்தில்தான் இருந்தார். அவர் மீது ஒரு பெரிய வழக்கு நடந்தது. அதற்குப் பணமில்லையென அண்ணாவிடம் வந்து உதவியும் அடைந்தார். அப்படிப்பட்டவர் இப்படித் தாங்கியதும், அண்ணாவின் முயற்சியில் நிதிபெற்ற புதுவைப் பெரியவர் அதே மேடையில் வீசிய சொற்களும் கண்டு, உண்மையில் நான் மனம் நொந்தேன் இப்படிப்பட்ட பிரச்சாரம் நடப்பதைக்கேட்டு காங்கிரஸ் வேட்பாளரான சீனிவாசன் அவர்களும் கூட வேதனைப்பட்டதாகச்சொன்னார்கள்,

அடடா! அந்தத் தேர்தல் பிரசாரத்தின்போது என்னென்ன வேடிக்கைகள் நிகழ்ந்தன என்று நினைத்தால் இப்போதுகூடச் சிரிப்பு வருகிறது. ஒரு திராவிட கழகப் பிரமுகரை அழைத்துப் பேசச் செய்தார்கள். அண்ணாவை ஒரு பிடி பிடித்துவிட்டு, "பார்ப்பனர்களை ஒழிப்பதற்கு என்று இந்த நாட்டிலுள்ள ஒரே தலைவர் பெரியார்தான்! அந்தப் பெரியாரை எதிர்த்து, பார்ப்பனர்களையும் கட்சியில் சேர்த்துக் கொள்வேன் எனச் சொல்லும், பச்சைத் துரோகி ஆரியதாசன் அண்ணாதுரைக்கா ஓட்டுப் போடப் போகிறீர்கள்?" என்று கர்ச்சித்தார் அந்த அண்ணன். மக்கள் என்ன மண்டுகங்களா? என்னடாது! பார்ப்பனர்களை ஒழிக்கும் அய்யாவின் சீடர் இங்கே ஏன் வரிந்து கட்டிக் கொண்டு ஒரு பார்ப்பனரான சீனிவாசனை ஆதரிக்கிறார்! அவர்களை ஒழிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு அதே மேடையில் அவருக்கு ஓட்டுக் கேட்கும் வேடிக்கை எங்கேயுண்டு!!—

இப்படி மறுநாள் பலர் கூடிக் கூடி ஆங்காங்கே விமசனம் செய்தனர். எதிர்க்கட்சி வேட்பாளர்—தன்னை எதிர்த்து நிற்பவர்—காங்கிரஸ்காரர் — என்றாலும் ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் அண்ணா அவர்கள் பேசியபோது டாக்டர் சீனிவாசனைப்பற்றி ஒரு வார்த்தைகூடத் தரக்குறைவாகப் பேசவில்லை? தங்கத்தின் வாயில் தரைப்புழு எப்படிவரும்? மாறாக, ஒவ்வொரு முறை பேசும்போதும், டாக்டர் சீனுவாசனின் நல்ல குணங்கள், அவர் செய்த தியாகம்முதலியவைகளைபாராட்டி விட்டு ஆனாலும் அப்படிப்பட்டவர் சார்ந்திருக்கிற கட்சி எப்படிப்பட்டது என்பதையே எடுத்துப் பேசினார். இதனால்தான், தோற்க நேர்ந்ததும்கூட டாக்டர் சீனுவாசன், அண்ணா அவர்களைப் பாராட்ட மறுக்கவில்லை! பழைய பாசத்தையும் நட்பையும்கூடபலரிடையில் தேர்தல் முறித்துவிடும் மாறாக கடந்த தேர்தலுக்குப் பிறகு அண்ணா அவர்களின் குடும்பத்துக்கு டாக்டர் சீனிவாசனே, டாக்டரானார்! இப்போதும் ஏதாவது தலைவலி காய்ச்சல் என்றால், இரவோ பகலோபாராமல் ஓடிவந்து மருத்துவம் செய்வதும் அந்த நல்மனம் கொண்ட டாக்டர்தான்!!

"அரும்பு இயற்கையாகவே மலராகிறது. ஆனால் முள்ளை மலராக்

(8-ம் பக்கம் பார்க்க

அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

ஒளி - 1 வெள்ளி 11-8-61 கதிர் - 24

# ஓட்டைக் கார்!

ஓடும்—

சில சமயங்களில், திடீரென்று, வேகமாக பறக்கும்.

உடனே, வேகம் குறையும்—குலுங்கும்.

எவ்வளவு பெட்ரோல் இருக்கிறது என்று காட்டும் கருவி (பெட்ரோல் கேஜ்) கிடையாது.

'ஸ்பீடா மீடரும்' இல்லை—அதனால் அது போகும் வேகத்தைக் கணக்கிட முடியாது.

காரை ஓட்ட உதவும் ஆக்சிலேடர் எல்லாக் காரிலும் ஒன்றே ஒன்றுதான் வைக்கப்பட்டிருக்கும்: இதில் ஏராளம் உண்டு!!

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தக் காரில் 'பிரேக்'கே கிடையாது!!

* * *

"என்னப்பா உனக்குக் கேடு! எங்கேயாவது போய் எக்கச் சக்கமாக மாட்டிக்கொண்டு உருப்படாத கார் ஒன்றை வாங்கிவிட்டாயா ஸ்பீடாமீடர் இல்லை—பெட்ரோல் கேஜ் இல்லை—பிரேக் இல்லை—ஆக்சிலேட்டர் மட்டும் ஐந்தாறு—எந்தப் பைத்தியக்காரனப்பா, இதைக் கார் என்று சொல்லுவான்.

ஓடுமென்கிறாய், உடனே நிற்குமென்கிறாய், என்ன இதெல்லாம், எதற்கு உனக்கு இப்படியொரு கார்?" என்று காரைப்பற்றி விபரம் தெரிந்த நண்பர்கள், சிறக்கூடும்! நண்பர்காள், இப்படிப்பட்ட கார் என்னிடமில்லை—உலகம் போற்றும் உத்தமர் நேரு பண்டிதர் அவர்கள் வசமிருக்கிறதாம்!!

"நேரு அவர்களிடம் ஏன் ஒரு ஓட்டைக்கார் இருக்க வேண்டும்—கண்ணசைத்தால் 'கெடிலாக்' வந்து நிற்காதா—இப்படித் திரும்பினால் குருஷேவ் ஒரு வானவெளிக் கப்பலையே செய்தனுப்பமாட்டாரா?—அவர் ஏன் இப்படி ஓட்டைக்காரை வைத்துக்கொண்டு அவதிப்படவேண்டும்? அவருக்கென்ன குறை? டேய்! குறும்பா! ஓட்டைக்காரில் போகுமளவுக்கு சீர்கெட்டவர், பேரற்றவர் என்று எமது நேரு அவர்களைப் பரிகசிக்க நினைக்கிறாய். பாதகா!!" என்று தேசிய நண்பர்கள் பாயக்கூடும்.

நண்பர்களே! இக்காரைப்பற்றி எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் நாட்டுக்கும் உலகுக்கும் தெரிவித்திருக்கிறார் திருவாளர் கே. சந்தானம் அவர்கள்!!

சந்தானம், நேரு அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்! இரயில்வே அமைச்சராகவும் டில்லியில் இருந்தவர்! லெப்டினன்ட் கவர்னராகவும் பதவி வகித்தவர்! எத்தனையோ கார்களையும் இரயில்களையும் பார்த்தவர்! சிறந்த பொருளாதார விமர்சகர் என்று பெயர் எடுத்தவர்! அவர்தான் நேரு அவர்களிடம் இருக்கும் கார், தார் போட்டால் ஓடும் மாடு போல, தண்ணீர் கண்டால் படுக்கும் சண்டிபோல நினைத்தால் சிரிக்குமளவுக்கு நிலைகுலைந்திருப்பதாக மெத்தவருத்தப்பட்டு, "இப்படியே இந்தக் கார் ஓடினால், 'ரிப்பேர்'கள் செய்யப்படாவிட்டால் எல்லாம் கெட்டுப் பணத்துக்குப் பணமும் நஷ்டமாகி பொருளுக்குப் பொருளும் மோசமாகி விடுமே" என்று பொருமிய வண்ணம் எழுதியிருக்கிறார்.

அவரா எழுதியிருக்கிறார்!—உண்மையாகவா!—அப்படியென்றால் நிசமாகயிருக்குமே!— அடடா, இது இத்தனை நாளும் தெரியாமற் போச்சே!—யாருமே இந்த உண்மையை நமக்கு எடுத்துச் சொல்லாமற் போய்விட்டார்களே!—ஞானிலமே போற்றுகிறது அவரை—அவர் ஓட்டைக்கார் வைத்துக்கொண்டு அவதிப்படுவதா என்று அங்கலாய்க்க ஆரம்பிக்கும் நண்பர்களே, அவசரப்பட வேண்டாம், அந்தக் காருக்கு வரப்போகிற ஐந்தாண்டில் நேரு அவர்கள் 11,600 கடி ரூபாய் செலவழிக்க இருக்கிறாராம்!

ஓட்டைக்காருக்கு ஒன்றல்ல, இரண்டல்ல, நூறுகூட அல்ல, ஆயிரம்கூட அல்ல, பதினோராயிரத்து அறுநூறு கோடி ரூபாயா!!—என்னப்பா, உனக்கென்ன பைத்தியமா—பிரேக்கில்லாத வண்டி—ஓடும்—உடனே நிற்கும்—குலுங்கும்—என்ன பெட்ரோல் போட்டோம், எவ்வளவு ஓடியது என்று கணக்கே அறிய முடியாத கார்—கொல்லர்பட்டரைக்கு அனுப்ப வேண்டிய அறதப் பழசு—அதற்கு வரப்போகும் ஐந்தாண்டுகளுக்கு இத்தனை கோடி ரூபாய் செலவா—இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கும் மக்கள் தொகையே 40 கோடிதானும்—நீ ஒரு உருப்படாத காருக்கு 11,600 கோடி என்கிறாயே—என்று என்மீது பாயக்கூடும்!! அதனால் உண்மையைச் சொல்லிவிடுகிறேன், நண்பர்களே, அன்பர் சந்தானம் அவர்கள் வர்ணித்திருக்கும் கார்—வேறெதுவுமல்ல, கடந்த 7-ந்தேதியன்று, டில்லிப் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதே, அந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்தான்!!

அவரா மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இப்படிப்பட்ட ஒரு காருக்கு ஒப்பிட்டார்—இருக்காது, இருக்காது, என்பீரேல் தயவு செய்து ஆகஸ்டு 3-ந்தேதி 'மெயில்' ஏட்டை எடுத்துப் படிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். நமக்குக்கூட இப்படியொரு உதாரணம் வராது! என்ன இருந்தாலும் சந்தானம் அவர்கள் சகலத்துறையும் அறிந்தவரல்லவா—அதனால் சரியான உதாரணத்தைக் காட்டி, அதற்கான விளக்கங்களையும் சொல்லியிருக்கிறார்!!

திட்டமிடுவதில் வல்லுநர்கூடி—திருத்தித் திருத்தி செம்மை செய்து—தேவப்பிரசாதம்போல இது நாட்டுக்கு என்று நேரு அவர்கள் வர்ணித்து—கிட்டத்தட்ட ஒரு 'மனு' இருக்கும் என்று சொல்லுமளவுக்கு அவ்வளவு பெரிதாக அச்சிட்டு—மிகவும் பெருமையோடு அகில இந்தியாவிலுமிருக்கும் காங்கிரசுக்காரர்கள்வரும் தேர்தலை வெல்லும் மோகனாஸ்திரம் என்று மயங்கி நிற்க—அப்படிப்பட்ட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பார்லிமெண்டில் அவிழ்த்து நீட்டப்பட்டிருக்கும் இந்த நேரத்தில்தான் காங்கிரசிலே யிருப்பவர்-தீவிரவாதி—செயல் வன்மையுள்ளவரான திரு. சந்தானம், நாம் போடும் திட்டம் ஏறிச் செல்வதற்கு இலாயக்கில்லாத ஓட்டைக்கார் என்று வாதிட்டிருக்கிறார்!!

போடும் ஐந்தாண்டுத் திட்டங்கள் போதுமான நலனைத்தரவில்லை—இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு 7000 கோடியை வேட்டு விட்டதுதான் மிச்சம்—ஒரு பலனும் உருப்படியாகத் தெரியவில்லை—ஏழை முன்னைவிட ஏழையாகத்தானிருக்கிறான்—விலைவாசிகள் முன்னைவிட ஏறியிருக்கிறது என்று நாம் கூறும்போது கோபம் வரும். காமராசருடைய தோழர்களுக்கு! இரண்டு ஐந்தாண்டுத்திட்டங்கள் போட்டும் மக்களுக்குத் தேவையான பொருள்களின் விலைகள் உயர்ந்து கிடப்பதை இன்னொருவர் மனதார ஒப்புக் கொண்டிருக்கிறார். அவர் யாரெனில் இந்திய உபகண்டத்துக்கே பணச் செலாவாணியை உண்டு பண்ணவும், அதை இறுக்கிப் பிடிக்கவுமான இந்தியன் ரிசர்வ் பாங்கியின் கவர்னர்—ஆம், கவர்னர்!—திரு. எச். ஆர். வி. அய்யங்கார் பம்பாயில் ஜுலை 26ந்தேதி பேசுகையில், காங்கிரசார் சாதித்தவைகளையெல்லாம் விளக்கிவிட்டு இதனையும்—சாதனைகளில் ஒன்றெனக் கருதியோ! என்னவோ!!—சொல்லியிருக்கிறார். அதாவது "கடந்த ஐந்தாண்டுகளில், விடாமல் தொடர்ந்து, ஆண்டுக்கு ஒன்றுக்கு ஆறுசதவீதம் விலைவாசிகள் உயர்ந்து வந்திருக்கிறது என்கிற உண்மையை ஒதுக்கிவிட முடியாது."

அவரென்ன சொல்வது—நமது அடுப்பங்கரை சொல்லுமே என்பார்கள் நமது பெண்மணிகள்!! ஆயினும், காங்கிரஸ் அன்பர்கள் மறுக்கிறார்களே, அவர்களுக்காக சுட்டிக்காட்ட விரும்புகிறோம். "அவரே" ஒத்துக் கொள்கிறார்! ஆண்டு ஒன்றுக்கு ஆறு சதவிகிதம் விலைவாசியேறி யிருக்கிறதாம்!! இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு, சுமார் 7000 கோடி செலவழிந்தபின் நாடு காணும் நிலைமை இது.

## முதல் திட்டம் புகுந்தபோது,

இது, இன்பவிருட்சம்!
எல்லாம் தரும்!
சுபிட்சச் சோலை!
சுகம் தரும்!!

என்று வர்ணிக்கப்பட்டது, ஆள்வோரால் அங்கே பார், இங்கேபார், அதைப்பார், இதைப்பார் என்று கூறப்பட்டது. எல்லா இடத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டு, முன்னைவிட நிலைமை மோசமாகிக் கொண்டு வருகிறதே என்றபோது,

## அது முதல்; இதோ இரண்டாவது!!

இது, மணம்தரும்.
குணம் காட்டும்.
இதுதான் உண்மையான

திட்டம்.
பாரேன், நீ!
பார்க்கப் போகிரும்,
பாரேன்!!

என்று கூறப்பட்டது. பார்த்தோம், பலகோடி ரூபாய் மோசமான பிறகு, ரிசர்வ் பாங்க் கவர்னரே ஒத்துக் கொள்கிற அளவுக்கு விலை வாசிகள் ஏறிக்கிடக்கிற இந்த நிலையில்,

அது இரண்டும் சிறுசு,
வருமோ இதன் மவுசு
11600 கோடி ரூபாய் பாரு!
ஏ, அப்பா, இதெல்லவோ பெரிசு!!

என்று இந்த கிழமை, டில்லிப் பார்லிமெண்டிலே, இந்தியத் துணைக் கண்டத்தின் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம், வைக்கப்பட்டிருக் கிறது.

திட்டங்கள் மீது நமக்குக் கோபமில்லை! ஒரு விடுதலை பெற்ற நாடு திட்டமில்லாமல் ஆட்டம் போட வேண்டும் என்று சொல்லும் அரசியல் சூன்யங்களுமல்ல, நாம். போட்டவர்கள் காங்கிரஸ்காரர்க ளென்பதால், அதைக் கண்டிக்க வேண்டும் என்கிற காமாலைக்கண் ணர்களுமல்ல! அரிசி உப்பு மிளகாய் அத்தனை வாழ்க்கைப் பொருள்களும் சரசமாகக் கிடைத்து, பார்த்தீரா திட்டம் போட்டதன் கெடுதலை என்று செப்பினுல், மக்கள் சும்மாவிடவும் மாட்டார்கள், நம்மை!!

கண்முன்னே தெரிகிறது, 'பெரியவர்கள்' ஒத்துக்கொள்கிற அளவுக்குத் தெரிகிறது, விலைவாசி பொருள்களின் விலை ஏறியிருப்பது!! அது மட்டுந்தானு என்ருல், காங்கிரஸ்காரர்கள் 14 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிச் சக்கரத்தைக் கையில் பிடித்த போது, வேலையில்லாத் திண்டாட்டம் என்ன நிலைமையிலிருந்ததோ அதே நிலைதான்—இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்த இப்போதும் உள்ளது.

இதற்கென்ன காரணம்?— இதைத்தான் சந்தானம் 'பெட்ரோல் கேஜ் இல்லை' என்கிருர்.

சரி! இவ்வளவு ரூபாய் செலவழித்தோம். என் வாழ்க்கைசரியாகவில்லை. என்னதான் ஆயிற்று பணம்?— என்று யோசிக்க வேண்டுமல்லவா, ஒரு அரசு—இதைத் தான் 'ஸ்பீடா மீட்டர் இல்லை,' என்கிருர் சந்தானம்!!

ஊர் தோறும் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றியபேச்சு —அதற்கொரு திட்டக் கமிஷன்—திரைப்பட விளம்பரம்— அதற்கொரு தனி நிர்வாகம் — மாநிலத்துக்கு மாநிலம் ஆலோசனை சபை—என்றெல்லாம் இருக் கிறதே—அதனைத்தான், 'ஆக்சிலேட்டர்கள்' ஏராளம் உண்டு, என்று வர்ணிக்கிருர்!!

எதற்கும், ஒரு கடிவாளம் உண்டன்ருே? ஏன்—எப்படி —எதற்காக—என்ன நடந்தது என்று கேட்க, ஒரு சாதா ரண ஆபீசுக்குகூட ஒரு மானேஜர் இருப்பாரல்லவா கட்டுப் படுத்த—அப்படியாருமில்லை யென்பதைத்தான் 'பிரேக்' இல்லாத வண்டி என்று உரைக்கிருர்!!!

*

அளப்பது இல்லை.
கணிப்பதும் இல்லை.
விரயமோ அதிகம்.
கேட்பாரும் இல்லை.
பெட்ரோல் கேஜ்
ஸ்பீடா மீடர்
ஆக்சிலேட்டர்கள்
பிரேக்.

ஆக மொத்தம், "திட்டம்" என்பது திண்டாட வைக்கும் ஒட்டைக்கார்!

"திட்டம் போடுவது என்ருல் என்ன? வகுத்தபடி நாம் செய்தோமா என்று பார்த்துக்கொண்டு, அதன்படி நடப்பது.

"பத்தாண்டுத் திட்டம் போட்டு கழிந்த பிறகாவது, என்னென்ன செய்தோம், எந்தந்தவகையில் பலன்கிடைத் திருக்கிறது, என்று பார்க்க வேண்டுமல்லவா?"

"மக்களைப் போய்க் கேட்டாலும் திட்டத்தின் பலன் தெரியவில்லை—மக்களுடைய பிரதிநிதிகளான பார்லி மெண்டு மெம்பர்களுக்குக்கூட காரிய சாதனை ஒன்றும் புரியவில்லை."

இதெல்லாம், ஒட்டைக்கார் என்பதற்கு, திருவாளர் சந்தானம் அவர்கள் தெரிவித்த சான்றுகளாகும்.

பொதுத் துறைக்கு இத்தனை கோடி ரூபாய் செலவு —தனியார் துறைக்கு இவ்வளவு கோடி செலவு—என்று கணக்குச் சொல்கிருர்களே ஒழிய, அப்படிச் செய்த செலவால், கிடைத்த நன்மை என்ன என்பதைக் கணக்குச் சொல்லுவதில்லை.

இன்ன செலவு செய்யப் போகிறோம் என்று அறி விக்கப்படுகிறதே ஒழிய, இவ்வளவு ஆகுமா, அப்படிச் செலவு செய்வதால் என்ன கிடைக்கும் என்று நினைப்பதில்லை.

'ஆற்றில் கொட்டினுலும் அளந்து கொட்டு' என்பது பழ மொழி! அளவு என்பது, எந்த இடத்திலுமில்லையென்கிருர் சந்தானம்! அது சம்பந்தமான புள்ளி விபரங்களையும் மிகவும் விளக்க மாகத் தந்திருக்கிருர்!! (அடுத்த இதழில் அதனைத் தருகிறோம்.)

இப்படிப்பட்ட ஓட்டைக் காருக்கு, 11600 கோடி செலவு செய்யப் போகிருர்களாம்.

இவ்வளவு கோடியும் செலவழிந்தபின் நாட்டின் சராசரி வருமானம் 5 சதவீதம் அதிகமாகுமா.

ஆகா! அதிகமாகுமாமே என்று நாம்கூடக் கொஞ்சம், ஆனந் தம் அடைந்தோம்.

ஆனுல் அடுத்த வரியிலே சொல்லிவிட்டார்கள்—இந்த ஐந்து ஆண்டுகளில் 1710 கோடி ரூபாய்க்கு புதுவரிகள் போடப்படுமாம், நம்மீது.

1710 கோடி ரூபாய்!
புதிய வரிகள்!!

வரும் பட்ஜட் ஆண்டு முதலே தொடங்கி, படிப்படியாக இது அதிகமாகும்.

1710 கோடி ரூபாய்! புதுவரி!! எதற்கு?
திருவாளர் சந்தானம் சொல்லும் ஓட்டைக்காருக்காக!!

---

(2- ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருதரம் சுற்றிலும் பார்த்தான் கமலா. அங்கே ஒரு இடத்தில் லீலாவின் படம் இருந்தது! அவனுக்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை!! அதேசமயம், வெளியில் யாரோ கதவைத் தட் டினுர்கள். ஆபிரகாமுக்கு தன் மகளும் கூட துரைசிங்கம் அய்யாவும் வந்து விட்டால், என்ன பதில் சொல்வது என்று பயம் வந்துவிட்டது. என்ன இருந்தாலும் பாபு தன்னுடைய நண்பன்! அவனைக் காட்டிக் கொடுப்பது, மகாக் கேவலம்.

கதவைத் திறந்தான். லீலா மட்டும் வந்தாள். நுழைந்த அவனைக் கண்டதும் கமலாவுக்கு எப்படியிருந்திருக்கும்? யாரு டைய காதலைப் பெறலாம் என்ப தற்காகக் கல்கத்தாவில் அலைந்து கொண்டிருந்தானு அவள் எதிரில் 'திருடன்' என்று தான் நிரூபிக்கப்பட்டால்! இத் தனை நாளைக்குப் பிறகு படாத பாடுபட்டு தான் பெற நினைத்த காதல் மலர், தன்னைக் காறித் துப்பி, தூர விரட்டினுல்!! உல கமே, அவனைக் கைவிட்டுவிடும் போலிருந்தது. அதே சமயம் அவள், அவனை ஆச்சரியத்தோடு பார்த்தாள். அவனை அவள் பார்ப்பதைக்கண்ட ஆபிரகாம், தன் சினேகிதனைப் பார்த்து அவர் கேள்விகளை அடுக்கு முன் தானே முந்திக்கொள்ள வேண்டு மென்று,

"அம்மா, லீலா! யார் தெரி யுமா அந்தப்பய? ஆள் நீட்டா யிருக்கானேன்னு நினைக்காதே! பக்காத் திருடன்! நீ இல்லா தப்போ, நைசா, நம்ம அறைக் குள் நுழையரதுக்காகக் கீழே யிருந்து ஏறியிருக்கான்...இதோ யிருக்காரே, பாபு, இவர் என் சிநேகிதர். இதைப் பார்த்துட்டு மேலே ஏறிவந்து, அவனைப் பிடிச் சுகிட்டுக் கத்தினுரு..." என் ருன்.

அப்போது, பார்க்கவேண்டுமே கமலாவின் முகத்தை! ஏதோ, சொல்ல வாயெடுத்தான். திரு டன் பாபுவும், பெருமூச்சுவிட்ட வனுய், "ஆமாமா! நான் மட்டும் பார்க்கலேன்னு, இந்நேரம் என் னென்னமோ நடந்திருக்கும்" என்று சொல்லிவிட்டு, நான் வர் ரேன் ஆபிரகாம் பிரதர், என்று நழுவ முயன்ருன். கமலாவுக்கோ என்ன செய்வதென்று புரிய வில்லை! காதலியின் எதிரில் கள் ளன் என்ற பட்டத்தோடு!! இந் தச் சிக்கலைச் சமாளிக்க எந்த விதமான கற்பனையும் முளைக்க வில்லை.

அவன் நிற்கும் கோலத்தைப் பார்த்த அவளுக்குச் சிரிப்பா யிருந்தது, "ஐயா, திருடரே! நீர் பெரிய ஆள். உம்மை சும்மா விடக்கூடாது. உமக்காக ஒருவர் காத்திருக்கிருர்" என்று துரை சிங்கம் தங்கியிருந்த அறைக்கு அவனை அழைத்துப்போனுள்.

ஆபிரகாம், பாபுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, படுக் கையில் படுத்தான்.

(தொடரும்)

## இரண்டே ஆண்டுகளில்

## திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி!

நடைபெற்ற மாவட்ட மாநாடுகள்.

—0— —0—

| | | |
|---|---|---|
| 1. | மதுரை | 16—11—59 |
| 2. | திருச்சி | 26—1—60 |
| 3. | தென்னுற்காடு | 30—1—60 |
| 4. | தஞ்சை | 14—2—60 |
| 5. | சேலம் | 21—2—60 |
| 6. | செங்கற்பட்டு | 5—12—60 |
| 7. | நெல்லை | 15—1—61 |
| 8. | சென்னை | 5—5—61 |
| 9. | கன்னியாகுமரி | 23—6—61 |
| 10. | கோவை | 9—7—61 |

5-ம்பக்கத் தொடர்ச்சி

கும் சக்தி மனிதனிடம் தானிருக்கிறது'' என்று மராட்டிய கதாசிரியர் காண்டேகர், எழுதியதாக ஞாபகம். உண்மையில் இதுஒரு அனுபவ மொழியாகும்!

எதிரி, விரோதி, ரௌடி, வீண் வம்புக்காரன் என்று நம்முடைய சமூகத்தில் பல முட்கள்" இருக்கலாம். அவை எடுத்தடி வைக்கும் போதும், இப்படி அப்படி கையை நீட்டும்போதும் நம்மைக் குத்தவும் செய்யலாம். ஆனால் அதே முட்களை அன்பு நட்பு மூலம் நல்ல மலராக மட்டும் ஆக்கிவிட்டால்! அடடா! மனித வெற்றியின் இரகசியமே இதில் அடங்கியிருக்கிறது!! இந்த வெற்றி இரகசியத்தைத் தேடிப் பிடித்து அடைந்தவரல்ல, அண்ணா. அவருடைய சுபாவமே, அப்படிப்பட்டது. ஆரவாரம், அர்த்தமில்லாத வெறுப்பு, வீண் கோபம், சொந்த வெறுப்பு விருப்பு, முதலியவைகள் மோதும் போது, மக்களுக்காகப் பணியாற்ற வந்தவன் சுயநலக்காரனாகிறான்! அப்படிப்பட்டவனால் அவனுடைய சுயநலத்துக்கு மட்டும் பாதை போட்டுக்கொள்ள முடியுமே ஒழிய எப்படி பொதுமக்களுக்கான நற்பாதை போட்டுத்தர முடியும்?

மாற்றாரானாலும் அவர்களை மதிக்க வேண்டும் என்பதற்குத் தேர்தல் முடிந்ததும் அண்ணா அவர்கள் செய்த ஒரு அருஞ்செயல் குறிப்பிடக் கூடியதாகும்.

அண்ணா தி. மு. க. தலைவர்! காமராஜர் காங்கிரஸ் தலைவர்!! சாதாரணமாக இன்னொரு கட்சித் தலைவருக்கு மாலைகளும் மரியாதைகளும் அதிகமாகக் கிடைத்தாலே மற்றவருக்கு மனந்தாங்காது; ஆனால் ஒரு தலைவர், இன்னொரு தலைவருக்கு தானே வரவேற்பும் வாழ்த்தும் பூமாலைகளும் போட்டுப் போற்றுவதென்பது வியக்கக்கூடிய பெரிய அரசியல் நாகரீகமாகும். அப்படிப்பட்ட ஒரு செயலை அண்ணா செய்தார்!

தன்னுடைய தொகுதியைச் சார்ந்த தண்டலம் எனும் கிராமத்தில் பெரிய விழாப்போல ஏற்பாடு செய்யச் சொல்லி, அங்கே காமராஜரை அழைத்து, மக்களும் பிறரும் மாலையிட்டும் வரவேற்பளித்தும் பாராட்டச் செய்தார். முதலமைச்சருக்கு மனுக்களும் கோரிக்கைகளும்கொடுப்பதென்றால், பேசாமல் செகரட்டேரியட்டுக்குப் போய் ஒரு எம். எல். ஏ. எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு வரலாம்! அல்லது முதலமைச்சர் சுற்றுப்பயணம் வரும் போது அவர் தங்குமிடத்தில் அவைகளைச் சமர்ப்பிக்கலாம்! குறும்புத்தனம் செய்ய வேண்டுமென்றால் கூட்டத்தில் பேசும் போது குறையுள்ளவர்களை அனுப்பி அங்கேயே மனுக்களைத் தருமாறு தூண்டிவிடலாம்!! ஆனால் அண்ணா, அந்த தண்டலம் விழாவை ஒரு ஜனநாயக விழவாகக் கருதினார்.

—வளரும்—

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஒளி மங்கி போயிற்று. விரிம்பேயில்லை. எப்பொழுதும் முனகல்...

குழந்தையைப் பார்த்துப் பார்த்து அவள் நொந்தாள். நாளையும், மறுநாளும் அதற்கப் பாலும் எதுவுமே கிடைக்காமல் போய்விட்டால் என்ன கதியாகும்? நீர் நிறைந்த கண்களோடு அவள் குழந்தையை அடிக்கடி முத்தமிட்டாள். இதயத்தில் எரியும் தீ, வளர்ந்து படர்கிறது.

நம்பிக்கைதளர்ந்தது. குழந்தை வளர்ந்து பெரியவனுவானு என்ற அவநம்பிக்கை படர்ந்தது...

குழந்தையின் அழுகைக் குரலே மாறிப் போயிற்று. அழுதழுது அது மார்பில் முட்டிய போது அவளுக்கு வேதனையும் விரக்தியும் தோன்றின. மீண்டும் வெறுங்கையுடன் தெருவில் நடப்பதை நினைத்துக் கொண்டாள்... அவள் வாய்விட்டு அழுதே விட்டாள்...

ஒருநாள் குழந்தை வாந்தியெடுத்தது. அதன் கண்கள் வெளித்தள்ளி மூச்சே நின்று விட்டதாக தோன்றியது.

நோயால் சோர்ந்துபோனகுழந்தையையும் சுமந்துகொண்டு அவள் நடந்தாள், கையிலும் உடம்பிலும் குழந்தையின் கழிவு வழிகிறது...எனினும் அவள் நடந்தாள்.

அந்தப் பரிதாபக் கோலத்தில் யாராவது 'புண்யாத்மாக்கள்' ஏதேனும் உதவி செய்வார்கள். அதிலும் நிம்மதி கிடையாது. குழந்தை ஓயாமல் அரற்றிக் கொண்டு அழுதது. இனி அது பிழைத்துக் கொள்ளும் என்பதே சந்தேகமாக இருந்தது.

ஒருநாள் அவள், அந்த பழைய தெருத்திண்ணைக்கே வந்து சேர்ந்தாள். இப்போது அந்த நாய்கள் அங்கில்லை. நோய் பிடித்த குழந்தை அவைகளுக்கு வேண்டாமோ என்னமோ?

பெருமழை பெய்யும் இரவு. அன்றும் அதே பெருங்காற்று. பழையதுணியை விரித்துக் குழந்தையை அதில் கிடத்திவிட்டு அவளும் படுத்துக் கொண்டாள் ...நிறைய கெட்ட கனவுகள்...

ஏதோ பனிக்கட்டி போல குளிர்ந்த பொருளில் அவள் கை தட்டியது. அவள் திடுக்கிட்டு விழித்தெழுந்தாள். குழந்தையை தொட்டுப் பார்த்தாள். விறைத்துப்போய் கிடந்தது. அவள் குழந்தையை வாரியெடுத்து புரட்டிப் புரட்டிப் பார்த்து 'என் தங்கமே' என்று அழைத்தாள். மௌனம்...

அவள் நெஞ்சில் அடித்து அழுதாள், மழையின் ஓசையிடையே அவள் அழுகை யார் காதிற்கும் எட்டவில்லை.

அடுத்த விடிவின் பொழுது, இருள் நிறைந்ததாக இருந்தது ... வானத்தில் நிறைய மழை மேகங்கள்—காற்று சுழன்று சுழன்று வீசிக் கொண்டுதான் இருக்கிறது...

பனியில் விறைத்துப்போய் சலனமற்றுக் கிடக்கும் குழந்தையின் அவலக்கோலம், அவள் கண்முன் நிற்கிறது. வேதனை கொண்டு பெற்று அணைத்து, அலைந்த நாட்கள் அவள் நினைவிற்கு வந்தன...

குழந்தையைத்துணியால்மூடிக் கொண்டு அவள் அங்கேயே அமர்ந்திருந்தாள். மழை, விடாத மழையாக பெய்கிறது...

இரவு வந்தது. எங்கிருந்தோ நாலைந்து நாய்கள் வந்து சேர்ந்தன. முன்னதைவிட பெரிய நாய்கள். அவைகள் மூச்சு விடுவதே பேய்க் காற்றாக இரைந்ததோ என்னமோ அவைகளை விரட்டியடிக்க அவளால் முடியவில்லை. அவள் தளர்ந்து செயலற்றுப் போனாள். அந்த நாய்களை விரட்டியடிப்பதற்கான அதிகாரம் அவளுக்கில்லை. அந்த வெற்றுடல், அவைகளுக்கு" சொந்தமானது. அவளுடையதல்ல!

நாய்களின்எண்ணிக்கைஅதிகமாயிற்று. அவை நாலாபக்கம் சூழ்ந்து கொண்டன.

நாய்களிடையே ஒரு கலகலப்பு. முனுமுனுப்பு அதிகமாயிற்று. மறுகணம் குழந்தையை நாய்கள் இழுத்துக் கொண்டன.

அவள், 'ஐயோ' என்றலறி விட்டாள்...நாய்கள் இருளில் எங்கோ மறைந்து விட்டன!

* * *

விஷமக்கார குழந்தைகள், விலைமிக்க விளையாட்டுப் பண்டங்களை உடைத்து விடுகின்றன. அவர்களுக்கு அதுவும் ஒரு விளையாட்டு, 'செய்யாதே' என்றால் புரிந்து கொள்வதில்லை...

அவளது குழந்தை மனிதகுலத்திற்கு வேண்டாத ஒன்றாக இருந்ததா? அது வளரவில்லை. யாரும் வளர்த்ததில்லை!

அந்தக் குழந்தையையும் வேதனையோடுதான் அவள் பெற்றெடுத்தாள். ஆனால் அதுமனித ராசியோடு சேர்ந்து வாழமுடியவில்லை, ஏன்? ஏனோ?

இன்று—

நகரின் தெருக்களில் நிறைந்த வயிறோடு அவள் நடந்து போகிறாள்.

தாய்!

எத்தனை குழந்தைகள் பிறந்து மடிந்து போனாலும், மனிதனின் உன்னதமான சிருஷ்டியந்திரம் எதன் மூலமாகவோ இயங்கத்தான் செய்கிறது.

ஆம்—

அவள் இனியும் தாய் ஆவாள். அவள் இனியும் தெருத்திண்ணையில் புதிய பிறவிக்காக வேதனை கொள்வாள்!!

—0—

# காலதேவனே கேள்!

"தோமானிய மக்களில் முன்னூறு பேர்களுக்கு ஒருவர்தான் உங்களிடம் இருக்கிறார்கள்; பாக்கி 299 பேர் வெளியில் இருக்கிறார்கள் ஜாக்கிரதை!''

காலக்கிழவன்—கிழ உருவத்திலே மறைந்திருக்கும் காலதேவன்—கூறிமுடித்தான்.

அப்போது...

"என்ன காலதேவனே! எச்சரிக்கைப் பலமாக இருக்கிறதே''

குரல் கேட்டு அனைவரும் திரும்பினர். சிரித்துக் கொண்டே வந்தான் சிந்தனைத்தேவன்.

காலதேவனுக்கு அவன்வருகை பிடிக்கவில்லை என்பதை முகத்தில் அந்நேரம் நெளிந்தோடிய வியப்பும் வெறுப்பும் கலந்த ரேகைகள் வெளிக்காட்டின. இருந்தாலும் சமாளித்துக்கொண்டான்.

"ஏதோ எனக்குத் தெரிந்ததை சரி என்று பட்டதை சொல்கிறேன் அவ்வளவுதான்'' என்றான்

"காலதேவரே! உமது சொல்

அரவரசு

லும் செயலும், உருவமும் உள்ளமும் ஏன் இப்படி மாறிவிட்டது? என்றுதான் ஆராய்ந்துகொண்டிருக்கிறேன்''

"அதுதான் உன் வேலையாயிற்றே''

"அதனால்தான் காலதேவனுகிய உன்னையும் சேர்த்து அணுவிலிருந்து ஆண்டவன் வரை அத்தனைப் பொருட்களையும் என்னால் எடைபோட முடிகிறது.''

சிந்தனைத்தேவன் தொடர்ந்தான்.

நடுத் தெருவில் நடந்துகொண்டிருந்தது அந்த விவாதம். தோமானியத் தெருக்களில் மீண்டும் பரபரப்பு. தோமானியர்கள் பலர் கூடிவிட்டனர். அந்தக் கூட்டத்தில் சிந்தனைத்தேவனை தலைவனாக ஏற்றுக்கொண்ட சந்ததியினரும் இருந்தனர்.

அவர்கள் காதுகளை கூர்மையாக்கிக் கொண்டனர் கருத்துக்களை கேட்க; கருத்துக்களைக் கேட்டு எண்ணங்களை இயக்க; எண்ணங்களை இயக்கி உருமாறும் காலதேவனின் உண்மை உருவை அறிந்துணர.

ருதுமானியர்களுக்கு அடிமைப்பட்டு கிடப்பதிலேயே ஆனந்தம் கண்டுவிட்ட 'அடிமை' களும் வந்தனர். வாய்பிளந்து நின்றனர்.

அவர்களுக்கு சிந்தனைத்தேவன் என்றாலே பிடிக்காது. இருந்தாலும் ஏதோ தெருச் சண்டை...இதை வைத்து நாலு 'கதை' எழுதலாம் என்ற நப்பாசை. அது அவர்கள் பிழைப்பு அவ்வளவுதான்.

"காலதேவரே! நீரே முன்னர் ஒரு முறை சொன்னதை எண்ணிப் பார்த்தீரா? அதற்கெல்லாம் உமக்கெங்கே நேரமிருக்கப் போகிறது. வினடிக்கு வினடி மாறும் விந்தை பிறவியாயிற்றே நீர். இருப்பினும் எனது தம்பிமார்கள் அதனை மறந்திருக்க முடியாது. அவர்கள் உம்மைப் படித்துக் கொண்டிருப்பவர்கள்... ஏன் இந்த உலகத்தையே படித்துக் கொண்டிருப்பவர்கள். இன்றில்லாவிட்டால் நாளை உருமாறி உருமாறி நீரும் எங்களோடு வருவீர் என்ற நம்பிக்கை கொண்டவர்கள். அவர்களும் நானும் உம்மைப்போல் அவசரக்காரர்களல்ல. நாங்கள் உண்மையை அளந்து அளந்து பார்த்திருக்கிறோம். நாங்கள் எண்ணுவதை தொழிலாகக் கொண்டவர்கள். ஆராய்ச்சியை ஆயுதமாகப் பெற்றவர்கள்.

உமக்கேத் தெரியும்

காலத்தின் வேகத்தைக் கணக்கிட்டது எண்ணம்

எண்ணத்தின் வேகத்தை...?

அது விடையில்லாத கேள்வி.

அதனால்தான் காலதேவரே! உமது வேகத்தின் ஏற்ற இறக்கங்களை உணர்ந்துதான் சொல்கிறேன் நீர் அவசரக்காரர்.

'தோமானிய குடிமக்களே! உங்களுக்கு இறுதியாக ஒன்றே ஒன்று சொல்வேன். கொலை உட்பட எந்த பாவத்திற்கும் மன்னிப்பு உண்டு......ஆனல்...ஒரு புனிதமான காரியத்தை துவங்கிக் கெடுத்த பாவத்திற்கு மன்னிப்பே இல்லை.'

நினைவிருக்கிறதா நீர் சொன்ன இந்த வாசகங்கள். கடந்துபோன நிகழ்ச்சிகளையும் 'கணக்கில்' எடுத்துக் கொண்டு இப்போது கூறும் புனிதமான காரியத்தை துவங்கிக் கெடுத்த துஷ்டன் யார்?' என்று.

"காலதேவரே! புதுக்'கோட்டை'யைப் பார்வையிட்டிருப்பீரே அந்த புதுக்'கோட்டை' கட்டிய மேய்ப்பன் புதிய பாதை வேறு வகுத்திருக்கிறாராமே.

"காலதேவரே! உமக்கும் அவரைத் தெரியும்......இருந்தாலும் கூறுகிறேன் கேளும்.

அவர்

நேற்றுவரை உரிமைப் பத்திரங்களில் 'நான் ஒரு தோமானியன்' என்று எழுதியவர்.

இன்று அதை நான்கில் ஒரு பங்காகச் சுருக்கிக் கொண்டு, அந்த நான்கிலொரு பங்கு தோமானுக்கும் 'ருதுவானியர்கள் விடுதலை தருவதாக உறுதி' தந்தால் மட்டுமாவது போதும் என்ற புது விளக்கம் தருபவர்.

மீண்டும் ஒருமுறை உமது பழைய வாசகத்தை நினைவு படுத்துகிறேன்.

'கொலை உட்பட எந்தப்பாவத்திற்கும் மன்னிப்பு உண்டு. ஆனல் புனிதமான ஒரு காரியத்தை துவங்கிக் கெடுத்தப் பாவத்திற்கு மன்னிப்பு இல்லை'

காலதேவரே! புதுக் கோட்டை கட்டியிருக்கிறாரே மேய்ப்பன் அவர் பழைய கோட்டையிலிருந்து விடுபடுவதற்கு சில நாட்களுக்கு முன்னுள்வரையிலும் அந்த மேய்ப்பன் கூறிக்கொண்டிருந்தார்.

'தோமான் நாடு தோமானியர்களுக்கே' என்று.

ஆனல் இன்று.

'பல பருவங்களுக்கு முன்னரே 'தோமான் நாடு தோமானியர்களுக்கே' என்பதில் எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. இதுவரை அவ்வாறு கூறியதற்கு மன்னிப்புத் தேவை' அதே மேய்ப்பன் கூறுகிறார்.

சந்தேகமிருந்தும் பல பருவங்கள் கூவிக்கூவி கூறியிருக்கிறார் 'தோமான் நாடு தோமானியர்களுக்கே' என்று. உள்ளத்தால் ஒன்று...உதட்டிலே ஒன்று; புரிகிறதா யார் என்று?

காலதேவரே! நீர் கூறும் கூத்தர்கள்கூட இவ்வளவு அழகாகப் பேச முடியாதே! ஆவேசமாக முழங்க முடியாதே! உணர்ச்சியோடு 'நடித்'திருக்க முடியாதே!''

சிந்தனைத்தேவன் சற்று நிறுத்தினான்.

"எனக்கேற்ப மாறுபவனைத் தானே நான் விரும்ப முடியும்... நான் சொல்கிறேன்...தோமான் கற்பனை ... தோமானிய நாடு தோமானியர்களுக்கே என்பது எப்படியோவந்த கொள்கை'' காலதேவன் கூறினான்.

சிந்தனைத்தேவனுக்கு சிரிப்பு வந்தது...காலதேவனின் மாற்றம் அவனுக்கு கவலை தந்தது... இருப்பினும் கலங்காமல் சிரித்துக்கொண்டே பதில் கூறத் துவங்கினான்.

"சரித்திர நிகழ்ச்சிகளுக்கு சாட்சியாக நிற்கும் காலதேவரே! இப்படிப் பொய் சாட்சி சொல்ல எங்கிருந்து கற்றீர். அது போகட்டும் எனக்கேற்ப மாறுபவன் தான் எனக்குப் பிடித்தவன் என்கிறீரே என் ஆராய்ச்சி என்ன கூறுகிறது தெரியுமா.

உமக்கேற்ப மாறிக்கொண்டே இருப்பவன் சந்தர்ப்பவாதி...... ஆனல் அதே நேரத்தில் உள்ளத்திலே இருக்கின்ற அடிப்படை கொள்கைகளுக்கேற்ப உம்மை மாற்றி அமைப்பவன் அறிஞன் ...தலைவன்...

அவன் உம்மைத் திருத்தி அமைப்பதற்காகவே தனது வேலைத் திட்டங்களை திருத்திக் கொள்பவன். ஆனல் அந்த நேரத்திலும் அடிப்படைக்கொள்கைகளை காற்றிலே பறக்கவிட்டு வேடிக்கைப் பார்க்காதவன், மாருக அவற்றை மேலும் விரிவுப் படுத்துபவன்.

ஆறு இடத்திற்கேற்ப வேகத்தை மாற்றும், இயல்பை

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)


## வாணி தமிழ்-இங்கிலீஷ் போதினி




தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறருடைய உதவி இல்லாமல் இங்கிலீஷ்படிக்கவும் பேசவும் கடிதங்கள்எழுதவும்கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரியபைண்டு புத்தகம் விலை ரூ. 5வி.பி.பி.செலவுரூ.1-25

**வாணி தமிழ், இந்தி சுபோதினி**

தமிழைக் கொண்டு பிறர் உதவியின்றி சுலபமாக ஹிந்தி படிக்கவும் பேசவும் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 2-25 வி.பி.பி.செலவு 75 ந.பை.

**ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)**

சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத்தைலம், ஸ்னோ, பேஸ் பவுடர், சாம்பிராணி போன்ற 200 கைத்தொழில்கள் கொண்டது. விலை ரூ. 3. வி. பி. பி. செலவு ரூ 1.

**குடும்ப இலகு வைத்தியம்**

வீட்டு சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கி, ஆரோக்கியம், பலம், ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்தியரகசியங்கள்அடங்கியது. தபால் செலவோடு ரூ. 3-50

வாணி புக் டிபோ, 3, மலையபெருமாள் தெரு, (தபால் பெட்டி எண்: 239) சென்னை-1.

# அமெரிக்கர் எழுப்பிய வினவும்

# அன்பழகனர் அளித்த பதிலும்

வெளிநாடுகளிலிருந்துஇங்கே வரும் அந்நியர்களுக்கெல்லாம், நம்மைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆவலிருப்பதைத் தோழர்கள் அறிவார்கள். அதிலும் குறிப்பாக அமெரிக்காவிலிருந்துவரும் பிரயாணிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி அறியும் ஆசை அதிகமாகி இருக்கிறது.

கடந்த 3—8—'62 அன்று சட்டமன்ற தி. மு. க. துணைத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ. அவர்களைச் சந்திக்க இரண்டு அமெரிக்கப் பேராசிரியர்கள் விரும்புவதாகச் சொல்லியனுப்பியிருந்தார்கள், தூதராலயத்தின் மூலம்.

அந்தச் சந்திப்பின்போது, நானும் (அரங்கண்ணல்) கலந்து கொண்டேன்.

டாக்டர் ஜேனட் மெக்டேனேல்ட் எனும் அம்மையார், வெர்ஜினீயாவிலுள்ள காலின்ஸ் கல்லூரியில் சரித்திரப் பேராசிரியர் ஆவார்.

டாக்டர் பீட்டர் ரோவ் எனும் வாலிபர் நார்த்தாம்டனிலுள்ள ஸ்மித் கல்லூரியில் அரசியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறவர்.

வந்தோரை பேராசிரியர் வரவேற்று சிற்றுண்டி அளித்தபின், ஒருமணி நேரத்துக்குமேல் உரையாடல் நடந்தது. ஓரளவுக்கு அவர்கள் நம்மைப்பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிருர்கள் என்பது புரிந்தது.

அந்த உரையாடலின் முக்கியமான பகுதிகளைக் கீழே தருகிறேன்.

ஜேனட்: நீங்கள் இந்தியாவிலிருந்து பிரிந்துபோக விரும்புகிறீர்களாமே...

பேராசி: ஆமாம்! பிரிந்து பிறகு நட்பு கொண்டு வாழ ஆசைப்படுகிறோம்...

பீட்டர்: அப்படியென்றால் நீங்கள் நேருவுடன் நட்போடா இருப்பீர்கள்...?

பேரா: இப்போதுகூட நாங்கள் அவருடைய அரசியல் சேவையைமதிப்பவர்கள்தான். எங்களுடைய கழகம் உலகத்திலுள்ள எல்லா மனிதர்களையுமே மதிக்க விரும்புவதாகும். சுருங்கச் சொன்னால் மனித நெறி வளர வேண்டுமென்று விரும்புவது எங்கள் இயக்கம் எந்த மனிதரையும் நாங்கள் வெறுப்பதில்லை...

ஜேனட்: என்னஇப்படிச் சொல்கிறீர்கள்? நீங்கள் பார்ப்பனரை வெறுப்பதாகக்கேள்விப்பட்டோமே...

பேரா: உலகிலுள்ள எல்லா மனித உயிர்களிடத்தும்அன்பு நிலவ வேண்டும் என்று ஆசைப்படும் நாங்கள் பார்ப்பனரை மட்டும் ஏன் வெறுக்கப் போகிறோம்? எங்களுடையதென்று நாங்கள்பாராட்டிப்புகழும் 'திருக்குறள்' என்றொரு நூலிருக்கிறது. திருவள்ளுவர் வழங்கிய அந்நூலை நாங்கள் போற்றுகிறவர்கள். அந்நூல் அன்பால் எதையும் சாதிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறது! அதையறிந்தவர்களான நாங்கள், எந்த மனித சமூகத்தையும் வெறுக்கவில்லை— ஆனால் மனிதர்கள் வேண்டுமென்றே உயர்வுதாழ்வும், பேதமும் வேற்றுமையும் உண்டாக்கும்போது அப்போக்கைக்கண்டிக்கிறோம் ... உதாரணமாக, இந்துமதம் எங்களுக்குள் பிரிவுகளை உண்டாக்கியிருக்கிறது. இதனால் சமூகத் துறையில் மட்டுமின்றி அரசியல் துறையிலும் பார்ப்பனர்களுடைய



ஆதிக்கம் ஏற்பட்டது... அதைக்கண்டு பார்ப்பனரல்லாதவர்களுக்கும் உத்தியோக உயர்வு, கல்வியறிவு வேண்டும் என்கிற குறிக்கோளுடன் நீதி பெற்றுத் தரும் கட்சி என்னும் பெயரைக் கொண்ட "ஜஸ்டிஸ்" கட்சி ஏற்பட்டது...

பீடர்: திராவிடமுன்னேற்றக்கழகத்தாராகிய நீங்கள் இந்திய சுதந்திரத்துக்கு ஒத்துழைத்தீர்களா...

பேரா: நாங்கள் சுதந்திரத்தை மறுக்கவில்லை. வரவேற்றோம்! ஒரு மனிதப் பரப்பை அதற்குச் சம்பந்தமில்லாதவர்கள் அடக்கியாள்வதை கண்டிப்பது எங்கள் கொள்கையாகும்...

ஜேனட்: ஆந்திரம், கேரளம், கன்னடம், முதலிய பகுதிகளில் உங்கள் கொள்கைக்கு ஆதரவு உண்டா...

பேரா: தமிழ் நாடளவுக்கு இல்லை. காரணம், இன்னும் நாங்கள் போதிய அளவுக்கு அங்கு போகும் வசதிகள் அமையவில்லை. இப்போதுதான் பாதைகள் கண்டு கொண்டிருக்கிறோம்...

பீடர்: நீங்கள் சொல்லும் திராவிட நாடு அமைந்தால், எது பொதுமொழியாகும்?

பேரா: அகில உலக மொழியான ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளலாம்!

ஜேனட்: அப்படியென்றால் இந்தி...?

பேரா: இந்தி ஒருபோதும் பொது மொழியாக முடியாது...இந்தியாவே நேருவுக்குப் பிறகு இருக்குமா என்பது சந்தேகமாயிருக்கிறதே!

பீடர்: அப்படியா?

பேரா: ஆமாம்! நீங்கள் எங்கே வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள் தமிழன், வங்காளி, மராட்டி, என்று இப்படிக் கேள்விப்படலாமே ஒழிய, 'இந்தியன்' என்று சொல்கிறவனைக் காண முடியாது...காரணம், 'இந்தியா' என்கிற முழு உருவமே வெள்ளைக்காரர்கள் கொடுத்தது...இந்தியன் என்பதும் அந்நியர்கள் வழங்கிய ஒரு சொல்லாகும்...

பீடர்:இந்தியா என்று சொன்னால் பெரிய நாடு. பெரிய நாடாயிருக்கும் போதுள்ள மதிப்பு சின்னநாட்டுக்கு வருமா?

நான்: அமெரிக்கா அமர்ந்திருக்கிற ஐ.நா.சபையில் சிலோனும் ஒரு அங்கம்தான்! சின்னது, பெரியது என்கிற வேற்றுமை அளவுகோல், இந்தநூற்றுண்டு ஒதுக்கித் தள்ளிவிட்ட ஒன்று, அதைச் சொல்லி, எல்லைகளை விஸ்தரிக்க முடியாது, உலகமும் ஒப்பாது.

பிறகு உங்கள் கழகத்தைப் பற்றிய ஆங்கில விளக்க நூல் ஏதேனும் உண்டா, என்று கேட்டார்கள். கைவசமிருந்த "ஹோம் லேண்ட்" இதழ் இரண்டினைக் கொடுத்ததோடு, நான் கொண்டு போயிருந்த "அறப்போர் மலரை"க் காட்டினேன். கூட்டம் ஊர்வலம் முதலியவைகளைக் கண்டு, ஆச்சரியப்பட்டார்கள். மலரின் முகப்பிலும், கடைசிப் பக்கத்திலுமிருந்த நமது தலைவர்களையும், நமது விடுதலை இயக்கத்திற்காக உழைக்கும் நடிகமணிகளின் படங்களையும் காட்டிச் சொன்னேன். தங்கள்வசம் இருக்கட்டுமென்று அறப்போர் மலரை அவர்கள் எடுத்துக் கொண்டு விடைபெற்றுச் சென்றார்கள்

---

9- ம் பக்கத் தொடர்ச்சி

மாற்றும், ஆனால் இலட்சியத்தை மாற்றுமா என்ன?

இந்த தலைமுறையில் தோமானியர்கள் விடுதலை பெருவிட்டாலும் காலதேவரே! நீர் காண்பீர் தோமானியவிழாவை. அந்த விழாவிலே உம்மை நான் சந்திப்பேன். இது உறுதி!"

எங்கும் ஒரே அமைதி.

சிந்தனைத்தேவன் சற்று நிறுத்தினன். காலதேவனை கோபமும் எரிச்சலும் குடைந்தன. இருப்பினும் கூறத் துவங்கினன்.

'எண்ணுவதைத் தொழிலாகக் கொண்ட ஏ காலதேவனே! கருத்துக்கள் மாறுபடுவதைக் கூடத் துரோகச்செயலாகஎண்ணுபவன் அந்தப் பழைய கோட்டையின் தலைவன் 'ஒரு கொடியில் ஒரு பூதான் மலரவேண்டும்; அது கருகிப்போன பின்னும் அதையேதான் தலையில் சூடிக்கொண்டு திரியவேண்டும்' இதுதான் அவன் தத்துவம்.

சிந்தனைத்தேவனுக்கு சிரிப்பு வந்தது...அவன் வாய் திறந்தான். 'இள நங்கையர் கூந்தலுக்கு மலர் மாற்றுவதைப் போலத்தான் கொள்கைகளையும் மாற்றிக்கொள்ளவேண்டும்; அதுதான் முழுநேர அரசியல்வாதிக்கு இலக்கணம்; அப்படித்தானே காலதேவரே!

'அடிப்படை மாற்றங்களுக்கும் வெளிப்புற மாற்றங்களுக்கும் வேறுபாடு தெரியாமல்—தெரிந்திருந்தாலும் தெளிவற்ற நிலையில் இருப்பதால் — இவ்வாறு கூறுகிறீர்- நீர் குறிப்பிட்ட அந்த பழைய கோட்டையின் பாதுகாவலன் கூறுவதெல்லாம்—

'இந்த மல்லிகைக் கொடியில் மல்லிகை மலர்கள் மட்டுமே மலர்கின்றது; எனக்கோ முல்லைதான் பிடிக்கும். முல்லை மலரை இந்த மல்லிகைக் கொடியில் முளைக்க வைக்க முயன்றேன்; முடியவில்லை என்ருன்.

காலதேவரே! காகிதக் கொடியாக இருந்தால் ஒரே கொடியிலேயே பலவகை மலர்களை இணைத்துவிடலாம். ஆனால் இயற்கையாக எழும் மல்லிகைக்கொடி அவ்வாறு அல்லவே! புதிய மேய்ப்பனுவது செயற்கைக்

( 11-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாலும் கரை உடைத்துக் கொண்டு வீணாகி விடுகிறது—அதைத் தடுக்க வேண்டுமானால், ஆற்றைத் தோண்ட வேண்டும்—என்ன செய்யலாம் என்று யோசித்தனர்!!

அதன் விளைவாக, 200 அடி கீழே தோண்டப் போகின்றனர்—அதாவது சுமார் நாலு தென்னை மரம் உயரம்—ஐந்து கிணறு ஆழம்—ஆற்றைத் தோண்டப் போகிறார்கள்!!

எவ்வளவு தூரம் தெரியுமா? 300 மைலுக்கு!!— இது போலத் தோண்டி, நதியையும் அகலமாக்கி விட்டால் (படத்தைப் பாருங்கள்) சுமார் 300 மைலிலிருந்து அசுவான் அணைக்கட்டு வரை, ஒரு பெரியஏரியாக இருக்குமாம். இதுவரை வீணாகப் பாலைவனத்துக்கும் கடலுக்கும் விரயமாகிக் கொண்டிருந்த தண்ணீரெல்லாம், இம்மாபெரும் ஏரியாகத் தேங்கிவிடும்.

200 அடி ஆழமும் அதற்கேற்ற அகலமும் கொண்டு உருவாக்கும்போது, அப்படிப்பட்ட நீர்நிலை உடைத்துக் கொள்ளாதவாறு இருக்கும்வகையில் பலமான கரைகளும் போடப்பட வேண்டுமன்றோ?

* *

பலன்தரும் காரியங்களைச்செய்யத் திட்டமிடும்போது, எகிப்து மக்களை, அவர்களுடைய 'பழம் பெரும் புகழ்' வந்துமிரட்டுகிறது! முன்னூறு மைல்களுக்கு இருநூறுஅடி ஆழத்தில் நைல்நதியை ஏரியாக்கும்போது, எகிப்து நாட்டின் புராதன சின்னங்களென உலகம் போற்றும் இரண்டு டஜனுக்கு மேற்பட்ட கோட்டைகள், குன்றுக் கோயில்கள், எகிப்திய அரசர்கள் உண்டாக்கிய நாகரீகச் சின்னங்கள் முதலியவை அழிந்து, இருந்த இடம் தெரியாமற் போய்விடும்!!

வளப்படுத்தும் 'அணையும்' வேண்டும்! அதே சமயம் உலகம் மதிக்கின்ற அந்தஉன்னதச் சின்னங்களையும் காப்பாற்றியாக வேண்டும்!!

என்ன செய்வது?—அவைகளில் சிலவற்றை அப்பப்படியே பெயர்த்தெடுத்துக் கொண்டு போய் இன்னோரிடத்தில் வைத்துக்கொள்ளலாம்! அதற்கு எவ்வளவு ஆட்கள் வேண்டும். பணம் வேண்டும்.

உலகத்தின் இரண்டாவது கலாச்சாரத்தொட்டில் என்பர் எகிப்தை! மனித வளர்ச்சியின் விலைமதிக்க முடியாதநாகரீகச் சின்னங்களாகும், அழியும் என்று அச்சப்படும் பொருள்கள். அவைகளைத்தோண்டவும்அகற்றவுமான—காரியங்களைச் செய்வதா! இல்லை, ஏரியைத் தோண்டுவதா! அணையைக் கட்டுவதா! இத்தனைக்கும் எங்கே போவது பணத்துக்கு!!

அதனால் உலக நாடுகளை நோக்கி ஒரு வேண்டுகோள்விடுத்தது—எந்த நாடு வேண்டுமானாலும் , இந்த வேலையில் எஙகட்கு உதவ வரலாம்—அப்படி உதவுவதற்கு சன்மானமாக எமது புராதனச் சின்னங்களில் சிலவற்றைப்பெறலாம் என்று. கலாப்ஷா என்பதை அகற்ற தாங்கள் தயார்என்று ஜெர்மனி முன்வந்திருக்கிறது. பல ஆசிய, ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும், பண உதவி செய்வதாக வாக்களித்துள்ளன.

ஆனால் இதிலும் ஒரு சங்கடம். இப்படி அகற்ற முடியாத வகையில் இரண்டு குன்றுக் கோயில்கள் உள்ளன! உருவாக்கப்பட்ட பெரிய கோயில்கள் அவை!! பிலே, அபுசிம்பெல் எனும் பெயர் கொண்டவைகள். ஐரிஸ் எனும் தேவதையின் கோயிலுள்ள தீவாடும் பிலே. எகிப்தை, ரோமானியகும் கிரேக்கரும் ஆண்டபோது எழும்பிய சரிதச் சின்னமாகும் இது. இந்தக் கோயிலை திருவரங்கம்போல் ஏரியின் நடுவில் உள்ளது போலாக்கிச்சுற்றிலும்மதில் எழுப்பி, தண்ணீர் மோதாதவாறு செய்துவிடலாம் என்று விஞ்ஞானிகள் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் அழசிம்பெலை, இப்படிச் செய்துவிட முடியாது! அதனைக் காப்பாற்றுவதற்கென என்சினீயர்கள் போட்டிருக்கும் திட்டம்தான் அபாரமானது! அற்புதமானது!!

* * *

மூவாயிரம் ஆண்டுகளாக உதயசூரியனின் ஒளிவிழ கம்பீரமாக நின்று கொண்டிருப்பது அபுசிம்பெலாகும். ஆதிகாலத்திய எகிப்தியர்கள் கட்டிய மிக மிகப் பழமையான நினைவுச் சின்னங்சுளில் ஒன்றாகும் இது. 108அடி உயரமுள்ளது. இதனைக் கட்டிய இரண்டாவது ராம்சேஸ் எனும் மன்னனின் உருவங்கள், மிக மிகப் பெரிதாக செய்யப்பட்டு விளங்குகின்றன. இந்த மன்னனுடைய காலத்துக்குப் பிறகுதான் எகிப்தின் பொற்காலம் முடிய ஆரம்பித்தது! இவன், ஒரு பெரியகோயிலைநிர்மாணித்து சூரியக்கடவுளுக்கு ஒப்படைத்தான் அதற்கு, தன்னுடைய பக்கத்தில் பிரிய மனைவியின் நினைவாக, ஒரு கோயிலையும் கட்டினான். அவனுக்கு எதையும் பெரிதாகச் செய்தே பழக்கம் போலும்! அதனால், அங்குள்ளசிலைகள் கல்லில் செதுக்கப்பட்ட உருவங்கள் எல்லாம் மிக மிக உயரமாகவே உள்ளன.

இதைக் காப்பாற்ற ஆறுகோடி டாலர் செலவில்இத்தாலியஎன்சினீயர்கள் மிக மிகத் துணிகரமான ஒரு திட்டத்தை அளித்திருக்கின்றனர். குன்றிலுள்ள இரண்டு கோயில்களையும் இரண்டு 'பிளாக்'குகளாக அப்படியே துண்டிப்பது! அதென்ன அல்வாவா, ஜாங்கிரியா என்று கேட்காதீர்கள்—இரண்டாக்கி, ஒரு பெட்டிக்குள் போட்டால் எப்படியாகுமோ — அதன் உயரத்துக்கு காங்கிரீட்டால் நான்கு பக்கமும் எழுப்பி, பக்கத்தையும் மூடி—அப்படிச் செய்து விடுவது. எழுதவும் எண்ணவும் சுலபமாக யிருக்கலாம். 108 அடி உயரமுள்ள ஒரு மலைக்குன்றைப் பெட்டிக்குள் அடைப்பது போலச் செய்வதென்றால் அது எவ்வளவு பெரிய சாதனை!! ஆமாம், கீழே என்ன செய்வார்கள் என்று கேட்பீர்கள்! அதுதான் இந்தத் திட்டத்திலேயே மிகவும் ரசமானதாகும்.

கீழே அந்தக் குன்றின் எல்லாத் திசைகளிலும் ஆழமாகத் தோண்டி அந்தக் குழிகளில் 300 'ஜாக்கி'களை வைத்து, மிக மிக மிக மெதுவாக ஜாக்கிகளை இயக்கப்போகிறார்கள் - மின்சாரத்தால் குன்றை ஜாக்கியால் மேலே தூக்கப் போகிறார்கள்! அப்படித் தூக்கும்போது மேலிருக்கும் பகுதிகள் உடைந்து சிதறாமலிருக்கத்தான் காங்கிரீட் பெட்டி!

(12-ம் பக்கம் பார்க்க)

## அன்பாளர் மறைவு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாள் முதல் நீங்காத பற்றுதல் கொண்டவரும், அண்ணா அவர்களின் நெருங்கிய நண்பரும், நம்மையெல்லாம் கண்டால் தன் குடும்பத்தாரைக் காண்பதுபோல் களிப்பெய்தியவரும், பச்சையப்பன் அறநிலைய உறுப்பினரும், காஞ்சி ராஜா பஸ் சர்வீசு உரிமையாளருமான, டபிள்யு. கே. தேவராசனார் அவர்களையும் சாவு கொண்டு போய்விட்டது என்று எண்ணு போது, மிக மிக வேதனையடைகிறோம். அண்ணா அவர்களுக்கு அவருடைய மறைவு ஒரு பெரிய இழப்பாகும். தந்தையின் மறைவால் தவிக்கும் தம்பி நடராசனுக்கும், தோழர் ஏழுமலைக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எவ்வகையில் நம்மால் ஆறுதல்கூற இயலும்! உழைப்பாலுயர்ந்து உழைப்பேபரின்பால் பற்றும் நேசமும் கொண்டு வாழ்ந்த அந்த அன்பாளரை இனி எங்கே காணப் போகிறோம்!!


## 'திராவிட நாடு'

மலையாள மாத வெளியீடு

ஆசிரியர்: ஆலப்புழை பி. எஸ். மாத்யூ

கேரளத்திலே கொள்கை முழக்கம் செய்ய 11—8—61 - ல் முதல் வெளியீடு. தலைமைக் கழக வெளியீட்டுச் செயலாளர் சிந்தனைசிற்பி சி. பி. சிற்றரசு அவர்கள் இந்த மலையாளம் திராவிட நாடு இதழை வெளியிடுவார்கள்.

தி. மு. கழக இலட்சியங்களை கேரளத்தில் பரப்பும் இதழ் 'திராவிட நாடு'

* * *

வருட சந்தா 3 - 50 தனி பிரதி 0 - 25

அன்பர்கள் ஆதரவுதந்து உதவும்படி வேண்டுகிறேன்

விபரங்கட்கு,

பொறுப்பாளர், அருணாசலம், மலையாள திராவிடநாடு,

திராவிட பப்ளிகேஷன்ஸ், பாலராமபுரம் அஞ்சல்.


(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடி செய்து காகிதப் பூக்களை பலவகை மலர்களை, மலரவைக் கட்டுமே. சூட்டிக் கொண்டால் கருகவும் செய்யாதல்லவா. காலதேவரே! குழ்ப்பமாக இருக்கிறதா ...அப்படி இருந்தால் என்னைப் போல நீரும் ஆராய்ச்சியில் இறங்கும், தெளிவு பிறக்கும்.

"காலதேவரே! நீர் கூறிய தத்துவங்களுக்கு விளக்கம் இதோ:

புதிய மலர்கள் மலரலாமா?

மலரலாம்...ஆனால் முல்லைக் கொடியில் அல்லி மலர வேண்டுமென்றல்லவா உள்ளத்தில் எண்ணுகிறீர். காளை கிழவனாகலாம்.

ஆம் ... உண்மை......வெளிப்படை மாற்றம்...நிகழக் கூடியது ஒரு சில காளையர் கிழவர்களாகும்போது சிலபல சிறுர்கள் காளையர் ஆவதையும் கண்டீரோ! பின் ஏன் காளையர் என்பதே கற்பனை என்றீர். ஒருவேளை 'வாழ்வே கற்பனை' என்ற தத்துவ தடாகத்தில் தத்தளிக்கின்றீரோ?

கன்னி கிழவியாகலாம் யாரும் தடுக்கவில்லையே. உண்மைதான் கன்னிகள் எல்லாம் கிழவிகளாகி விட்டால் கன்னியர் பரம்பரை அற்றுப் போகாது. 'கன்னியர்' என்பது கற்பனையாகாது.

இரவு பகலாகலாம்

பகல் இரவாகலாம்......ஆனால் இரண்டும் இணைந்த 'நாள்' என்ற 'அடிப்படை' அப்படியேதான் இருக்கும்.

ஆலமரம் விழுதுவிடலாம், அவ்விழுதிலும் ஒரு விழுது பிறக்கலாம்...ஆனால் ஆலகாலம் நிறைந்த அதிசய விழுதுகளை ஆலமரம் ஊன்றமுடியுமாஎன்ன?

'என்ன காலதேவரே! மௌனமாக இருந்துவிட்டீர்! உலகத்தின் மேல் மட்டத்தில் நிகழும் மாற்றங்களைக்கொண்டே எதையும் நிர்ணயித்துவிடாதீர். அடிப்படைக் கருத்துக்கள், அடிப்படை மாற்றங்கள் இவைகளை ஆராய்ந்து பழக்கப்பட்டவன் நான்.

மீண்டும் சொல்கிறேன் காலதேவரே! உமது வேகத்தை என்னால் கணிக்க முடியும்; உமது உருவமாற்றத்தைஎன்னால்உணர முடியும் இதைநினைவில் நிறுத்தும்

...தென்றல் ஒன்று வந்தது. வாடைக்காற்றாக மாறியது. அந்த வாகனத்திலேறி காலதேவன் மறைந்தான்...

சிந்தனைத்தேவன் சிரித்துக் கொண்டே நின்றான்.

# கேள்வி பதில்

கே: அண்ணலே! நான் ஒரு சிறு கதை எழுதி வைத்துள்ளேன். அதைத் தங்கள் இதழான 'அறப்போ'ரில் வெளியிடுவீர்களா?

ப. நடராசன்,
மேல் அக்ராவரம்,
பெங்களூர்-2.

பதில்: ஆரம்ப நிலை எழுத்தாளர்களை வளர்க்க வேண்டுமென்பது என் ஆசையே! மாவுக்கல்லை அரைப்பது போலில்லாமல், புதுமையிருப்பின் நிச்சயம் வெளியிடப்படும்.

கே: சொர்க்கத்தைப் பூமிக்கு எப்படிக் கொண்டுவரலாம்?

சடகோபன்,
தாம்பரம்.

ப: தெரியாத ஒரு இடத்தைப் பற்றி நினைக்குமளவுக்கு பூமி என்ன 'பாபம்' செய்தது. விழிகளைத் திறந்து பார்ப்பீர்களேயானுல் பூமியைவிட அழகான தொன்றுமில்லை.

கே: டில்லியிலிருக்கும் ராஜ்ய சபா, லோக் சபா இரண்டுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

தியாகராசன்,
தேவூர்.

ப: நாக்கும் பற்களுமுள்ள வாய்களைக் கொண்டது லோக சபா. இன்னென்று பல் இல்லாதது.

கே: விரோதம்கொள்ளப் போகிறேன் உம்மீது...

சுகுமாரன்
திருச்செங்கோடு.

ப: இருதயத்தில் விரோதம் என்கிற விளக்கை ஏற்ற ஆரம்பித்தால் அதனுல் மற்றவருக்கு நட்டமில்லை. அந்த விளக்கின் நாக்குப் பெரிதாகி, கடைசியில் உம்மையே விழுங்கிவிடும்...

கே: எங்களூர் பஞ்சாயத்து போர்டு அமைச்சர் இராமையாவுக்கு வரவேற்பு கொடுத்தது. விழாவின் முடிவில் 'தேசீய கீதம்' என்று போடப்பட்டு இருந்தது. எல்லோரும் எழுந்து நின்ருர்கள். பேசாமலே, கொஞ்ச நேரம் நின்றுகொண்டிருந்தார்கள். "யார், பஞ்சாயத்து அதிகாரி?" என்று கேட்டார், மந்திரி. அவசர அவசரமாக ஓடிவந்த பஞ்சாயத்து அதிகாரி, மைக் முன்னுல் போய் நின்றுகொண்டு, "சுக்லாம் பிரதரம்..." என்று ஆரம்பித்தார்! இந்தியாவின் தேசீய கீதம் சுக்லாம் பிரதாமா?

பாலமுருகன்,
இராமேசுவரம்.

ப: ஆச்சரியந்தான்! அமைச்சரை சொல்லும்படிக் கேட்டிருந்தால் இன்னும் ரசமாயிருந்திருக்குமே!!

## பண்பாளர் மறைவு

சென்னை சட்டமன்றத் தலைவர் டாக்டர் கிருஷ்ணுராவ் அவர்களது மறைவால் துயர் கொண்டுள்ள அனைவருக்கும் நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிருேம். மாற்றுக் கட்சியினராலும் அவர் அளித்த மரியாதையையும், மதிப்பையும் எல்லோரும் கடைப்பிடிப்பது தவிர, அப்பெரியாரின் நினைவுக்கு, நாம் செய்யவல்லது ஏதுளது!!

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி மெதுவாகத் தூக்கும்போது, உடனுக்குடன் குன்றின் கீழ்ப்பாகத்துக்கு ஆட்களை வைத்து பெரிய பெரிய காங்கிரீட் தூண்களை வைக்கப் போகிருர்கள். உயர, உயர, அதன் உயரத்தையும் எழுப்பிக் கொண்டே போவார்கள். இப்படி குன்று, உயர்த்தப்படுமாம்! கோயில் தூக்கப்படுமாம்!!

ஏரியின் தண்ணீர் எவ்வளவு உயர்ந்தாலும் ஒன்றும் செய்ய முடியாத அளவுக்கு அபுசிம்பெல், உயரமாக்கப்படுமாம்.

பிறகு, அந்தக் காங்கிரீட் தூண்களை இணைக்கும் பெரிய சுவர்கள் எழுப்பப்பட்டு, அதன் மீது முன்பிருந்த குன்று விளங்குமாம். அபுசிம்பெல் என்ருல், தானியத் தந்தை என்று பெயராம்!!

இது சாத்தியமா—அது சாத்தியமா, என்று கேட்கிறவர்கள், இப்போதும் உண்டு. சாத்தியமில்லாதது என்று எதுவும் இல்லை உலகில்! சாதிக்கும் ஆர்வமும், அப்படிச் சாதித்துப் பெறும் பொருள் நம்முடையது எனும் உரிமையும் இருக்குமாயின் எதுவும் செய்யலாம்! எபபடியும் வாழலாம்!!

மன்னன் பருக் ஆண்டபோது அவனுக்கும் மன எழுச்சி இல்லை—அவனிடம் சொன்னுல் என்னுகுமோ, தலை போகுமோ, உயிர் போகுமே, என்று மக்களுக்கும் பயம்.

அந்தப் பயம் இன்றில்லை! காரணம் எகிப்து அரசு, இன்று ஒரு சுதந்திர அரசு! மக்களரசு!! இன்ப துன்பங்கள், மனனனுக்கு மட்டுமல்ல, தேசத்துக்கு என்று எண்ணும் மக்களைக் கொண்ட அரசு.

இதனுல்தான், தன் தன் காரியங்களைக் கவனித்துக் கொள்ள, விடுதலை எழுச்சி உருவாவது! இப்படியொரு விடுதலை நமக்கும் கிடைத்தால், நமக்கென்று நாம் எவ்வளவோ வசதிகள் செய்து கொள்ளலாமல்லவா!!

—0—

உலகத்தையே
அதிரச்செய்தான்!-ஹிட்லர்
அவன் பாதையால் அழிந்தோர், கோடி ! கோடி !!
ரசமான வரலாறு! எல்லோரும் அறியவேண்டியது
நாஜிசம்


அடுத்த இதழ் முதல் 'அறப்போரில்'

ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6